Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO–12.

'சின்வா'




பாதரக்ஷைகளில் பிரபல்யமிகுந்த பெயர்

இலங்கை பூராவிலும் கிடைக்கும்
இதையே வற்புறுத்தி பாவியுங்கள்.

சின்வா பாதரக்ஷைகளில் சிறந்தது

சின்வா, 72, 1-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

புத்தகம் 13 திருவள்ளுவர் ஆண்டு 1990 வைகாசித் திங்கள் 3-ம் நாள் 17—5—1959 ஞாயிற்றுக்கிழமை துல்கஃதா பிறை 8 இதழ் 51

# தமிழன் சிந்திய இரத்தம் நினைவு கூரப்பட வேண்டும்

## மே 27 முதல் ஜூன் 5 வரை ஈழத் தமிழக விடுதலை நாட்கள்

## எங்கும் கொண்டாட இராசதுரை எம். பி. வேண்டுகோள்

(சுதந்திரன் நிருபர்)

ஈழத்தமிழகத்தின் விடுதலை நாட்களாக பத்து நாட்களைச் சேர்ந்தாற் போல் கொண்டாட வேண்டுமென்றும், இந்தப் பத்து நாட்களுக்குள்ளும் ஆங்காங்கே யுள்ள தமிழரசுக் கட்சிக் கிளைகளும் இதர தமிழ் ஸ்தாபனங்களும் அரசியல் மீட்டல் நிகழ்ச்சிகளையும் கூட்டங்களையும், மாநாடுகளையும் ஒழுங்கு செய்து தமிழ் பேசும் மக்களின் அரசியல் விழிப்புணர்ச்சியை ஊக்குவிக்க வேண்டுமென்றும் மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரை சுதந்திரன் நிருபரிடம் கூறினர்.

வருடா வருடம் மே மாதம் 27-ந் தேதி முதல் ஜூன் மாதம் 5-ந் தேதி வரை யுள்ள 10 தினங்களையும் ஈழத் தமிழினத்தின் விடுதலை இயக்கக் கொண்டாட்ட நாட்களாகக் கொள்ளலாம் என்று கூறிய திரு இராசதுரை 1958 மே மாதம் 27-ந் தேதி தென் இலங்கை முழுவதிலு முள்ள தமிழ் மக்கள் தாக்கப்பட்ட சம்பவத்தையும் அதனுல் வகுப்புக் கலவரம் உருவாகி அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்ட விருத்தாந்தங்களையும் எடுத்துக் கூறினர்.

### தியாக இரத்தம் சிந்திய தினம்

1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ந் தேதி சிங்களம் மட்டும் மசோதா பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டதென்றும், அன்றையத் தினமே காலி முகக் கடற்கரையில் தமிழ் மக்களின் சத்தியாக்கிரகம் நடைபெற்றுத் தமிழ் மக்கள் அடியும் உதையும் பட்டு முதன் முதலாகத் தியாக இரத்தம் சிந்திஞர்கள் என்றும், அதனுல் வருடா வருடம் மே 27 முதல் ஜூன் 5 வரையுள்ள பத்துத் தினங்களும் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த தினங்களாகின்றன என்றும் திரு இராசதுரை சுட்டிக் காட்டினர்.

### மட்டக்களப்பில் நினைவுக் கட்டடம்

தம்மைப் பொறுத்தவரையில் இந்தப் பத்துத் தினங்களின் போது தாம் மட்டக்களப்பில் விசேஷ கூட்டங்களுக்கும், கட்சிக் கிளை அமைப்பு வேலைகளுக்கும் ஏற்பாடு செய்யப் போவதாக அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் 1956 ஜூன் 5-ந் தேதியையொட்டி நடைபெற்ற கலவரத்தின் போது உயிர் இழந்த திரு. ஸ்டீபன் இராஜேந்திரம், திரு. தங்கராஜா ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்கள் உயிர் இழந்த இடத்தை அடுத்து ஒரு நினைவுக் கட்டடம் அமைப்பதென்றும், அந்த இடத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பித்து மேற்படி இரு வீரர்களும் நல்லடக்கம் செய்யப்பட்ட மயானத்தின் எல்லையில் மாபெரும் பொதுக் கூட்டமொன்றை நடத்துவ

(8-ம் பக்கம் பார்க்க)

### விசேஷ செய்தி

எதிர்வரும் 22-ந் தேதி (வைகாசி அனுடம்) வள்ளுவர் திருநாள் உலகின் பல பாகங்களிலும் கொண்டாடப்படும்.

இத் தினத்தை யொட்டி விசேஷ செய்தி ஒன்று சுதந்திரனில் வெளியிடப்பட்டிருக்கிறது.

சோவியத் அறிஞர் திரு அலெக்சான்டர் பட்டிகோர்ஸ்கி திருக்குறள் பற்றி வெளியிட்ட புதுமையானதும் புரட்சிகரமானதுமான கருத்து அடங்கிய செய்தி அது. இரண்டாம் பக்கம் பார்க்க.



### பேராசிரியர் ஹுமாயூன் கபீர்

(சுதந்திரன் நிருபர்)

பார்வைக்கு எளியவர்; பேச்சுக்கு இனியவர்; பெருமைக்கு உரியவர்-அவர் தான் பாரதப் பேரரசின் கலாச்சார, விஞ்ஞான ஆராய்ச்சித்துறை அமைச்சர் ஹுமாயூன் கபீர்.

தமது மனதில் தோன்றியதை துணிந்து சொல்லும் தகைமையாளர் அவர். பல காலமாக அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டு வந்த உர்தூ மொழியை அரசாங்க மொழிகளில் ஒன்ருக அங்கீகரிப்பது என்று சமீபத்தில் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியதென்ருல் அது அமைச்சர் ஹுமாயூன் கபீர் யாருக்கும் அஞ்சாமல் தமது மனதில் இருந்ததை எடுத்து உரைத்ததன் விளைவுதான்.


ஹுமாயூன் கபீர் ஓர் அதிசயமான அரசியல்வாதி. அறிவும் ஆற்றலும் மிக்கவர். சிந்தனைத் தெளிவும், சீரிய குணமும் படைத்தவர். குறுகிய நோக்கம் அற்றவர்.

இந்திய நிதி அமைச்சர் திரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி ராஜினுமாச் செய்த போது "அப்பதவிக்குப் பொருத்தமானவர் ஹுமாயூன் கபீர்" என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் எழுதியது.

வங்காள மொழி அவருடைய தாய்மொழி. அதில் பெரும் வல்லுநர் அவர். ஆங்கிலம் அவர் ஆசையோடு கற்ற மொழி. வங்காளம் வலக்கை என்ருல் ஆங்கிலமும் அதே இடத்தில் இருக்கிறது இன்று. வங்காள மொழியில் 'சட்டுராங்' என்ற வாரப்பத்திரிகையை கடந்த 18 வருடங்களாக வெளியிட்டு வருகிருர். அவருடைய ஆங்கிலக் கவிதைகளை இங்கிலாந்து பாராட்டி வெளியிட்டிருக்கிறது. பொருளியல் துறையில் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகப் பட்டம் வேறு பெற்ற விற்பன்னர் அவர்.

கவியரசர் தாகூர் என்ருல் கபீருக்கு உயிர். அவருடைய கவிதைகளிலே மிகுந்த ஈடுபாடு உடையவர்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் இங்கு வந்த பேராசிரியர் கபீர் முன்பு ஒரு தடவை 1954ல் இலங்கை வந்துள்ளார். அப்போது பேராதனையில் நடைபெற்ற உலக தத்துவஞான மாநாட்டுக்குத் தலைமைதாங்கினுர்.



கடல் கடந்த நாட்டிலிருந்து காசைக் கொணர்ந்த கவர்தான் மேலே படம் பிடித்துத் தரப்பட்டு இருக்கிறது.

பேர்ஷியன் கல்பைச் சேர்ந்த பஃரைனில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் அன்பர்கள் குருக்கள் குடும்பக் கஷ்ட நிவாரணத்துக்கு நிதி திரட்டி அனுப்பியிருக்கிருர்கள். செய்தி 11-ம் பக்கத்தில்

## இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)



ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, நோய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்கு வரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுரை-போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினுல் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,
170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைபிளில், தமிழ் வேதங்களில் உள்ள முரண்பாடுகள் திருக்குறளில் இல்லை—தனிச் சிறப்பு இது

## வள்ளுவர் கருத்தும், வெளிப்படுத்திய முறையும் அனைவரையும் ஈர்க்கின்றன

## காலத்தையும் எல்லையையும் வென்ற நூல் என்று சோவியத் அறிஞர் பாராட்டு

திருக்குறளைத் தமிழ் வேத நூல் என்றோ அல்லது கிறிஸ்தவர்களின் பைபிளுக்குச் சமானமான தென்றோ சொல்வது தவறு என்றும் மேற்கூறிய இரண்டுக்கும் இல்லாத பெரும் சிறப்பு திருக்குறளுக்கு உண்டு என்றும் சோவியத் கல்விமான் ஒருவர் கூறினார்.

அவர் சோவியத் விஞ்ஞானக் கழகத்து கிழக்குலகக் கல்விப் பிரிவைச் சேர்ந்த திரு அலெக்சாண்டர் பட்டிகோர்ஸ்கி ஆவார். திருக்குறள் காலத்தையும் பிரதேச எல்லையையும் கூட வென்ற நூல் என்று கூறி அந்நிய மொழிக்காரரான அவர் திருக்குறளுக்கு பெருமை சேர்த்தார்.

திரு அலெக்சாண்டர் பட்டிகோர்ஸ்கி மேலும் கூறியதாவது:-

திருக்குறள் தமிழ் வேத நூல், அதாவது தமிழ் மறை அல்லது 'பைபிள்' என்று சொல்லப்படுகிறது. இப்படிச் சொல்வது பொருத்தம் என்று எனக்குத் தோன்றவில்லை.

தமிழ் மறைகளிலும் கிறிஸ்தவர்களின் பைபிளிலும் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஒரே நிலையான கருத்து நூல் முழுவதிலும் இழையோட வைத்திருப்பதாக இல்லை. இதற்குக் காரணம் தமிழ் மறைகளும் பைபிளும் ஒரே காலத்தில் குறிப்பிட்ட ஒருவரால் ஆக்கப்படாததுதான் எனலாம்.

### திருக்குறளின் தனிச் சிறப்பு

பல நூற்றாண்டுக்காலமாக வெவ்வேறான சமுதாய அமைப்புகளில் அறிஞர்களாக விளங்கியவர்களின் இலட்சியங்களும் அவர்கள் நவின்ற கருத்துக்களும் இரண்டு நூல்களிலும் இடம் பெற்றிருக்கின்றன. இரண்டுமே தொகுப்பு நூல்கள். ஆளுக்காள் கருத்து வேறுபாடு இருப்பது போல இரண்டு தொகுப்பு நூல்களிலும் கருத்து முரண்பாடுகள் இடம்பெற்று விட்டன.

திருக்குறள் தொகுப்பு நூல் அல்ல. ஒரே ஆசிரியரால் ஆக்கப்பட்டது. இன்னும் தமிழ் மறைகளிலும் கிறிஸ்தவ பைபிளிலும் கருத்துகள் வலியுறுத்தப்பட்டிருக்கும் முறைக்கும் திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கும் விதத்துக்கும் அதிக வித்தியாசம் உண்டு.

### கருத்துக்கள்

திருக்குறள் நூலாசிரியர் திருவள்ளுவர் குறிப்பாக எவரையும் முன்னிறுத்தி எதையும் சொல்லவில்லை. மன்னரை மற்றவர்களிடமிருந்து பிரித்து எடுத்து அவர்களை மட்டும் விளிக்கவில்லை வள்ளுவர். எந்த ஒரு தனிப் பிரஜையையும் அவர் நோக்கவில்லை. எந்தக் குருவையும் அவர் குறிப்பிட்டு எதையும் சொல்லவில்லை. பொதுவாக மனிதனை விளித்து, மனிதனுக்கு பயன்படத்தக்கனவற்றைச் சொன்னார். அவைதான் திருக்குறளில் காணப்படும் கருத்துகள்.

மனிதனை விளித்து அவனுக்கு எதைச் சொல்லும் போதும் திருவள்ளுவர் அவன்முன் ஏதோ சட்ட அதிகாரியாகவோ அல்லது தீர்க்கதரிசியாகவோ தோன்றவில்லை. மாறாக, மனிதனின் நலம் பேணுபவனாக, ஆசிரியனாக, நண்பனாகவே தோன்றினார்.

### அமைதியும் அடக்கமும்

தோன்றியவர் சொன்னதையெல்லாம் எப்படிச் சொன்னார்? கிறிஸ்தவ தீர்க்கதரிசிகளைப்போலத் தீர்க்க தரிசனங்களாக, நொடிகளாகச் சொன்னாரா? 'நீங்கள் அது செய்யுங்கள். இது செய்யாதீர்கள். மீறிச் செய்தீர்களோ கொடிய சாவுக்கு ஆளாவீர்கள்' என்று நாலடியார் பாடிய நல்லறிவாளர்களைப்போலப் பயம் காட்டினாரா வள்ளுவர்? இல்லை. அமைதியாகச் சொன்னார்; சந்தேகத்துக்கு இடமின்றிச் சொன்னார். தமக்கு உண்மையென்று நன்கு பட்டதை பிறருக்குச் சொல்ல வேண்டும் என்று விரும்பி சிறந்த சிந்தனையாளன், கலைஞன் என்ற நிலையில் நின்று சொல்லி வைத்தார்.

### கலை அம்சச் சிறப்பு

தமிழ் இலக்கியத்துக்கு, ஏன், உலக இலக்கியத்துக்கே குறள் முக்கியமான தொன்றாகக் கருதப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் குறளின் கலை அம்சச் சிறப்பு மட்டுமல்ல. எல்லைக்கோடு எதுவும் இல்லாமல், எவரும் விரும்பி வரவேற்கும் மிக உயர்ந்த மனித எண்ணத்தின் வார்ப்பாக குறள் விளங்குகிறது. இதனால் ஒவ்வொரு சாகியத்தாரும், ஒவ்வொரு பிரிவினரும், ஒவ்வொரு மதத்தினரும் குறள்மீது உரிமை கொண்டாடுகிறார்கள்.

### உரிமை

தென் இந்தியாவை எடுத்துக்கொண்டால் அங்குள்ள கிறிஸ்தவர்கள் குறள் கிறிஸ்தவ நெறி தழுவி எழுதப்பட்டதாகச் சொல்லி அது தமக்கு உரியது என்று கொள்கிறார்கள்; ஜைனர்களும் அப்படியே தம் மத அடிப்படையில் நின்றே குறள் எழுதப்பட்டிருப்பதாக வாதிட்டு அது தமக்கே உரியது என்று உரிமை கொண்டாடுகிறார்கள். இத்தனைக்கும் குறளில் எந்த ஒரு தனி மதச் சார்பும் கிடையாது; இருப்பதாக அறவே தெரியவில்லை. திருக்குறளை அற நூலாக, ஒழுக்க நூலாகவே காண முடிகிறது. இடைக்காலத் தமிழ் இலக்கிய நூல்களிலெல்லாம் பூரணத்துவம் பெற்றதும் மாசு மறுவற்றதுமான ஒரு நூல் திருக்குறள் என்று சொல்லுமளவுக்கு இன்று அதன் தகுதியும் உபயோகமும் நம்மைத் தூண்டுகின்றன.

### காலத்தையும் எல்லையையும் வென்றது

நூல்களுக்கு அவற்றின் சொந்தமான முடிவு உண்டு என்றவாறு லத்தீன் மொழியில் ஒரு வாக்கியம் உண்டு. திருக்குறள் அதற்கு விதிவிலக்காக விளங்குகிறது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட திருக்குறள் இன்றும் பெருமையோடு பேணிப் போற்றி வருங்கால சந்ததியாருக்காகவும் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்றால் அது காலத்தை வென்ற நூல் என்றே சொல்ல வேண்டும். காலத்தை மட்டுமல்ல பிரதேச எல்லையையும் வென்ற நூல் திருக்குறள். நூல் தோன்றிய தமிழ் நாட்டோடு அதன் பிரஸ்தாபமும் உபயோகமும் நின்றுவிடவில்லை. உலகெங்கும் அதன் நாமம் வழங்குகிறது.

### மொழிபெயர்ப்பு

முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பல கிழக்குலக, மேற்குலக மொழிகளிலெல்லாம் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. ருஷ்ய மொழியில் திருக்குறளை மொழிபெயர்க்கும் முயற்சி தொடங்கப்பட்டுவிட்டது. இதனால் வருங்காலத்தில் சோவியத் மொழி வல்லுநர்களும், இலக்கிய மேதைகளும் மட்டுமல்லாமல் சோவியத் பொதுமக்களும் தமிழ் இலக்கியச் செல்வமான திருக்குறளில் பெரிதும் ஈடுபாடு கொள்வார்கள் என்று நம்பலாம்.

இவ்வாறு திரு. அலெக்சான்டர் பட்டிகோர்ஸ்கி தெரிவித்தார்.

# மொறிஷஸ் தீவில் திருவள்ளுவர் திருநாள்

## மே 22-ல் கொண்டாட விரிவான ஏற்பாடுகள்

சுமார் ஓரிலட்சம் தமிழர்கள் வாழும் மொறிஷஸ் தீவிலே திருவள்ளுவர் திரு நாளை இம் மாதம் 22-ந் திகதி கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை அங்குள்ள தமிழ் முன்னேற்றக் கழகம் செய்து வருவதாகப் பிரஸ்தாப கழகத்தின் செயலாளர் திரு. பு. அருணாசலம் அறிவித்திருக்கிறார்.

ஊர்வலம், சொற்பொழிவுகள், நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் விழாவில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மே 22-ந் திகதி (வைகாசி அனுடம்) திருவள்ளுவர் திருநாளை உலகமெலாம் வாழுந் தமிழர்கள் யாவரும் ஒன்றுபட்டுக் கொண்டாட வேண்டும் என்று தமிழ் மறைக் கழகம் விடுத்த வேண்டுகோளின் படி திருவள்ளுவருக்குப் பெருவிழா எடுத்துப் புகழ் சேர்க்க மொறிஷஸ் தீவில் மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு நாடுகளிலும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் மறைக் கழகம் ஆண்டு தோறும் நடத்தி வரும் வள்ளுவர் விழாவை இம் மாதம் 22-ந் திகதி யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் கொண்டாடவிருக்கிறது.

குறைந்த செலவில்
வெண்மையான சலவைக்கு

**மில்க் வைட் நீல சோப்**

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:
**மில்க் வைற் சோப் தொழிற்சாலை,**
527, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உங்கள் நீடித்த எழிலுக்கு
**'எலைட்'**
சூப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
**'எலைட்'**
சுப்பர்லோன் ஜோர்ஜட்

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

**குண்டன்மால்ஸ்,**
லிமிட்டெட்,
கொழும்பு.

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளிஏப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
**ஆனந்தா வைத்தியசாலை,**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

**வே. வன்னியசிங்கம், கொல்லங்கலட்டி.**

கே: திருவாளர் சுந்தரலிங்கம் வவனியாப் பட்டின சபைத் தேர்தலில் போட்டியிடுவது எதை ஒத்திருக்கிறது? அவர் வெல்வாரா?

ப: கடல் தாண்டிய வீரர் நவரத்தினசாமி 'பாத் ரூம்' தண்ணீர் தொட்டியுள் நீச்சலடிப்பதை ஒத்திருக்கிறது. நண்பர் சுன் வென்றாலும் தோற்றாலும் இரண்டும் அவருக்குத் தோல்விதான். அடுத்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியார் எதுவித தயக்கமுமின்றி அவருக்கெதிராக ஒரு கட்சி அபேட்சகரை நிறுத்த வழி செய்து கொடுத்து விட்டாரல்லவா?

ஃ

**ஆர். ஞானம், ஈச்சலம்பற்றை**

கே: பட்டணத்துப் பெண்ணை மணப்பது நல்லதா? பட்டிக்காட்டுப் பெண்ணை மணப்பது நல்லதா?

ப: இது மணம் முடிக்கும் கணவனுடைய மனோபாவத்தைப் பொறுத்தது. அவர் 'பாட்னர்ஷிப்' வியாபாரத்தில் நாட்டமுடையவராக விருந்தால் பட்டணத்துப் பெண்ணையும் 'சோல் புரோபரைட்ட'ராக மட்டும் விளங்கவிருப்பமுடையவரானால் கிராமத்துப் பெண்ணையும் தேர்ந்தெடுக்கலாம்.

ஃ

**ந. பரமசிவம், கொழும்பு**

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவள் என்னைக் காதலிக்கிறாளா என்பதை எப்படி அறிவது?

ப: உமது அபிப்பிராயத்தை எழுத்தில் வெளியிட்டுப் பாரும். கடிதம் நெஞ்சுச் சட்டைக்குள் சொருகப்பட்டால் காதல்தான்! அவள் தந்தையின்முன் சமர்ப்பிக்கப்பட்டால் மோதலுக்குத் தயாராக முதுகைப் பதனிட்டுக்கொள்ளும்.

கே: மரைக்காயர், தேமிஸ் இவர்களில் தபால் மந்திரிப் பதவிக்குத் தகுதியானவர் யார்?

ப: தேமிசுக்கு 'சோட்டிங்' காவது தெரியும். மரைக்காயருக்கு விலாசத்தைச் சரியாய்ப் படிக்கக்கூடத் தெரியாதே.

ஃ

**எம். ஏ. சிவனு, பலாங்கொடை**

கே: 'விவாகம் செய்வது நல்லதா அல்லது பிரமச்சாரியாக வாழ்வது நல்லதா?

ப: 'விவாகம் ஒரு முற்றுகையிடப்பட்ட கோட்டையைப்போன்றது. உள்ளே புகுந்துவிட்டவர்கள் வெளியேறிவிடப் பார்க்கிறார்கள். வெளியே உள்ளவர்கள் உள்ளே புகுந்துவிடத் துடிக்கிறார்கள்'—இப்படி ஒரு சீன பழமொழியுண்டு. இந்த நிலையில் எது நல்லது என்று எப்படி நான் சொல்ல முடியும்?

கே: திமிறிக்கொண்டு போகும் இளைஞனை எப்படி அடக்குவது?

ப: அழகிய மங்கையென்ற தடத்தை எப்படியாவது அவன் காலில் மாட்டிவிடுங்கள். அப்புறம் அவன் அங்குசத்தைக் கண்ட அலியனைப் போல் அடங்கிவிடுவான்.

கே: பூமிக்கும் வானத்துக்கும் எவ்வளவு தூரம்?

ப: அற்புதமான நடிப்புக்கும் அலட்சிய நடிகர் ராஜேந்திரனுக்கும் எவ்வளவுதூரம் உண்டோ அவ்வளவு தூரம்!

ஃ

**ஆ. தெட்சணாமூர்த்தி, பண்ணாகம்**

கே: மச்சான் குயுக்தியாரே, உமது மகளை எனது மகனுக்கு திருமணம் செய்து வைக்க ஆசைப்படுகிறேன். உமது விருப்பம் என்ன?

ப: கொஞ்சம் பொறும். மூதூர்ப் பிரதிநிதி முகம்மது அலி-கொண்டுவரும் சீதன ஒழிப்பு தீர்மானம் மசோதாவாகிச் சட்டமாகட்டும்.

ஃ

**எம். புகாரி, கொழும்பு.**

கே: மார்க்ஸீய புரட்சித் தந்தை திரு பிலிப் குணவர்த்தனுவுக்கும் கல்வியமைச்சரின் காரியதரிசி பெரேராவுக்கும் ஏற்பட்ட வாய் கலப்பின்போது 'நீ ஒரு குமாஸ்தா என்பதைஅறிந்துகொள். மந்திரியைப்போல் நடித்து வாயடிக்காதே' என்று திரு பிலிப் கர்ஜித்தாராமே. குமாஸ்தா என்றால் குறைவு, மந்திரி என்றால் உயர்வா?

ப: வர்க்க பேதமற்ற, உயர்வு தாழ்வற்ற சர்வ சமரஸ சமத்துவ கொள்கைகளைப் பரந்த சர்வ தேசியக் கண்ணோட்டத்தில் பார்ப்பவர்களுடைய திருவாயிலிருந்து சிந்தும் செம்மணி மொழிஐயா, அது.

ஃ

**மு. தளையசிங்கம், சாவகச்சேரி.**

கே: அடிப்படை முன்னணித் தலைவர் திரு வி. குமாரசாமி இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ப: காலையில் தன் டைப்பிஸ்ட் பெண்மணியிடம் சிங்களம் கற்றுக்கொள்ளுகிறார். மாலையில் தாம் பெற்றிருக்கும் குளிர் பான ஏஜன்ஸிக்கு விற்பனையாளர்களைத் தேடிக்கொண்டு திரிகிறார்.

ஃ

**பி. நடராஜா, குண்டசாலை.**

கே: இலங்கையில் ஒரு தமிழ் சினிமாப்படம் தயாரித்தார்களே. அது ஏன் இன்னும் வெளிவரவில்லை?

ப: அது வெளிவருவதற்கு முன்னால் தயாரித்தவர்களின் குல்மால் வேலைகள் பல சி. ஐ. டி. காரர்களுக்கு வெளிவந்துவிட்டன!

மிஸ்டர் குயுக்தியார்
C/o சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு.—12

**க. த. மயில்வாகனம், செட்டிபாளையம்.**

கே: ஒரு மாணவி பாடசாலைக்குப் போகும்போது என் வீட்டையே உற்றுப் பார்க்கிறாளே, ஏன்?

ப: அந்த வீட்டில் ஒரு இரண்டு கால் வெறி நாய் உட்கார்ந்து தெருவில் போகும் வயது வந்த பெண்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்ற செய்தியை அவள் கேள்விப் பட்டிருப்பாள்.

கே: அன்பும் அறிவும் உள்ளவர்களை நான் நாடுகிறேன், ஏன் தெரியுமா?

ப: தெரியுமே, அவையிரண்டும் உம்மிடம் இல்லாமையினால்!

**கலைதாசன், கல்லடி உப்போடை.**

கே: பெண்மணிகள் சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு கேலியான பதில்களைக் கொடுத்து அவர்களின் மானத்தை வாங்குகிறீர்கள் என்பதாக ஒரு சில பெண்மணிகள் குறைசொல்லுகிறார்கள். அவர்களுக்கு உங்கள் பதில் என்ன?

ப: என் அன்னை ஒருபெண். துணைவி ஒரு பெண். மகள் ஒரு பெண். எல்லாவற்றிற்கும் மேலாக நான் வணங்கும் தெய்வம் ஒரு பெண்—அதாவது தமிழ் அன்னை. இந்த நிலையில் பெண்களின் மானத்தை வாங்க நான் முற்படுவேனா? நயம்பட வுரைக்கும் நகைச்சுவைக் கருத்துக்களை நங்கையர் நையாண்டியெனக் கொண்டால் நான் என் செய்வேன் பராபரமே!

கே: இராவணன் ஒரு திராவிடன் என்பதற்கு ஆதாரம் என்ன?

ப: ஆதாரம், இராவணன் என்ற பெயரேதான் போலும். திராவிடர் கறுப்பு நிறத்தவர் என்றும் ஆரியர் வெளுப்பு நிறத்தவர் என்றும் கொள்ளப்படுகிறது. இராவணன் என்றால் இரா—வண்ணன் என்று பொருள். வண்ணம்: நிறம், இரா: கருமை. இப்படிப் பார்க்கப்போனால் கார்வண்ணனாகிய கிருஷ்ணனும் திராவிடன்தானே?

## யாரை மயக்க வந்துவிட்டாய்?

(சோமலிங்கம்)

கூடுகட்டி அதனுள்ளே
குடும்பம் நடத்தத் தெரியாது
ஆரும் கட்டிய கூட்டுள்ளே
அரவமின்றி முட்டை இட்டு
சிரும் சிறப்பும் உள்ளவர்போல்
தேமாஞ்சோலை தனிலிருந்து
பாரே மயங்க இசைபாடும்
பாவிக் குயிலே சொல்லாயோ?

பிள்ளை வளர்க்கத் தெரியாதா?
பெரிய இடத்துப் பெண்களைப் போல்
கொள்ளை வேலை உனக்குண்டா?
கூட்டம் நடத்தக் "கிளப்"புண்டா?
கண்ணைக் கவரும் கரிய நிறக்
காக்கை உனக்கு "ஆயா"ளா?
பண்ணைப்பாடி உன்குஞ்சைப்
பார்க்க உனக்கு முடியாதா?

பெற்ற பிள்ளை தன்னிடத்தில்
பிரியமில்லாக் கருங்கறுப்பி
உற்ற கதைகள் என்னிடத்தில்
உரைக்கமாட்டாய்; நீ அன்று
கற்ற இசைகள் யாவையுமே
காட்டில் சொரியும் சுயநலமி
பெற்ற குஞ்சு திண்டாடப்
பெருமை கொள்ளும் கருங்குயிலி!

இசையில் நல்ல திறமையுண்டு
எமக்கு என்ற இறுமாப்பில்
கிளியின் குரலைக் கேட்டுவிட்டுக்
கிறுகி அன்று அறிவுகெட்டு
திசையே உனக்குத் தெரியாது
திணறி எங்கோ சென்றுவிட்டு
வசையே பாட இன்று வந்தாய்
வம்பு செய்யத் துணிந்து விட்டாய்!

மானம் உள்ள காக்கையினம்
மறைவாய் அங்கு வாழ்வதையே!
காணநேர்ந்தால் உன்னுடைய
கதிதான் என்ன? எண்ணிப்பார்!
ஈனமன்றோ மாற்றாரின்
இரவற் கூட்டுள் வாழுவது
கானந் தேடிக் குச்செடுத்துக்
கட்டிவாழு கூடொன்று.

தேர்தல் காலம் கிட்டியதால்
தெரிந்து அனுப்பிய மக்களையே
பார்க்க வந்த "எம். பி" போல்
பறந்து வந்த குயிற்பேடே!
வார்த்தை இல்லை உனைத்தூற்ற
வந்த வழியே ஓடிப்போ
[illegible]
[illegible]


## "ஆஸ்த்மா"வைப் பற்றிய உண்மைகள்

ஆஸ்த்மா என்ற நோய்வு ஒரு பயங்கரமான வியாதியாகும். நரம்புத்தளர்ச்சி, காலநிலை, மூக்கடைப்பு மார்பில் ஏற்படும் சளி, வயிற்றுக்கோளாறுகள் ஆகிய பல காரணங்களால் ஆஸ்த்மா, என்ற நோய்வு ஏற்படுகிறது.

பல வருட ஆராய்ச்சிக்குப் பிறகு வியாதியைப் பூர்ணமாகக் குணமாக்கக் கூடிய "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புதமான மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. இம் மருந்தின் பெருமையைப்பற்றி நூற்றுக்கணக்கான கடிதங்கள் தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளதை நீங்கள் நன்கு அறிவீர்கள்-நன்றிக் கடிதங்கள் எழுதிய தமிழன்பர்கள் யாவருக்கும் நம் நன்றி—இன்னும் சில கடிதங்கள்.

(1) டாக்டர்,

எனக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் பூர்ண குணம்.

என் அன்பு நன்றி.

திரு. S. S. றமீது
C/o திரு. K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்
11, பவுன்டரி ரோட் (BOUNDRY ROAD.) மட்டக்களப்பு)

(2) எனது மனைவிக்கு 15 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, பூர்ணசுகம் நன் நன்றி.

திரு. இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. சி. ஆபீஸ் பக்கியல்ல (களுவாஞ்சிக்குடி)
களுவாஞ்சிக்குடி(EP)

ஒரு பாட்டில் ஆஸ்த்மடிக்காவில் எனக்கிருந்த ஆஸ்த்மா என்ற நோய்வு பூர்ணசுகம்.

வணக்கம்
திரு. அ. ஆனந்தலிங்கம்
ரூப்பியன் தோட்டம், கம்பர்மலை
வெள்வெட்டித்துறை

அன்பர்களே அநேக ஆண்டுகளின் ஆராய்ச்சியின் விளைவாக வந்த "ஆஸ்த்மடிக்கா" என்ற அற்புத மருந்தைப் பாவியுங்கள்.

3 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண சுகமடையும் என்பது நம் உத்தரவாதம். ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

"ஆஸ்த்மடிக்கா"
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்—ரூ. 15/-
(மிக உபாதை தரக்கூடிய நாள் பட்ட ஆஸ்த்மாவுக்கு)
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

வி. பி. பி. சதம் -/85

விபரங்களுக்கு

டாக்டர்.

சுக ஆதார வைத்தியசாலை
MODERN CLINIC
255, காலி ரோட், பம்பலப்பிட்டிய
கண்வன்ட் எதிரில்
கொழும்பு-4.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணைப் பள்ளிக்கூடம் பொருளாதாரம் (15)

# திட்டமிடுதல் : சாராம்சம்

# PLANNING : SUMMARY

**பாத்திரங்கள்**

1. உபாத்தியாயர் உலகநாதர்
2. அப்பாக்குட்டி
3. குமரேசு

**உபாத்தியாயர்:**

சென்ற முறை இதுவரையும் நாம் ஆராய்ந்த விடயங்களைத் திரட்டி அவற்றின் சாராம்சத்தை இன்றைக்கு ஒப்பிப்பது என்று தீர்மானித்தோம்.

**குமரேசு:**

ஆம். பாடசாலைகளில் மாணவர்கள் வருட இறுதியில் அல்லது தவணை யிறுதியில் படித்தவற்றை பாடம் ஒப்புவிக்கு முகமாக பரீட்சைக்கு இருப்பார்கள். அதுபோலத் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் படித்தவற்றை தவணை யிறுதியில் திரட்டிப் பாடம் ஒப்புவிக்க வேண்டியது அவசியம்தானே.

**அப்பாக்குட்டி:**

இப்ப ஆர் அப்படிப் பாடம் ஒப்புவிக்க வேண்டும் என்பதுதான் கேள்வி.

**குமரேசு:**

நீங்கள்தான் இங்கு ஒரு நாளும் தவருமல் பாடம் கேட்ட மாணவர் ஆயிற்றே. அதனால் நீங்களே அப்படிப் பாடம் ஒப்புவிக்க வேண்டியவர்.

**அப்பாக்குட்டி:**

அது நம்மாலே முடியாது.

**உபாத்தியாயர்:**

திரட்டிச் சொல்வதையும் நீங்கள் சொல்லுவதுதான் நன்று, குமரேசு.

**குமரேசு:**

சரி. இயன்றளவு சுருக்கமாக நாம் இதுவரையும் சென்ற பதினன்கு பாடங்களிலும் ஆராய்ந்தவற்றைத் திரட்டிச் சொல்ல முயற்சிக்கிறேன்.

நாம் ஆதியில் முகவுரையாக ஆராய்ந்தது திட்டமிடுவது ஏன் என்ற விடயத்தையே.

இன்றைய உலகில் உற்பத்தியாகும் பொருட்களின் தொகுப்பு நாளும் பொழுதுமாக விஸ்தரிக்கப் பட்டுக்கொண்டு வருகின்றது. ஆங்கிலத்தில் கூறின் (The range of production is continually expanding) என்று சொல்லலாம். இது விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக ஏற்படும் நன்மையான ஒரு விளைவு.

அதன் காரணமாக அதாவது புதிய புதிய பொருட்கள் உற்பத்தியாவதன் காரணமாக புதிய புதிய தேவைகள் நம் மனதைப் பிடிக்கின்றன.

**உபாத்தியாயர்:**

வானொலி மூலம் ஒலிபரப்புச் செய்யும் விஞ்ஞான வளர்ச்சி கிடைத்ததன் நிமித்தம் தானே நாம் வானொலிப் பெட்டி ஒன்று வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

**அப்பாக்குட்டி:**

"ஆகாஷ்வாணி" எண்ட குளறுபடியும் இல்லாமல் இருக்குமே!

**குமரேசு:**

ஆம். பொருளுற்பத்தியின் தொகுப்பு விஸ்தரிக்கப் படுவதிலும் தேவைகள் விரிந்து கொண்டு போவதிலும் ஒரு சூக்குமமான அம்சம் இருக்கிறது. உற்பத்தியாகும் பலவகைப்பட்ட பொருட்கள் பூர்த்தி செய்யும் தேவைகள் அத்தியாவசியமான தேவைகள் என்ற வரம்பிற்கு அப்பாற்பட்டு நிற்கின்றன. உற்பத்தியாகும் பொருட்கள் பெரும்பாலும் உல்லாச வாழ்விற்கு ஏற்பட்டவை யாகும். மேலும் புதிது புதிதாக உற்பத்தியாகும் பொருட்கள் ஒன்றுக்கொன்று போட்டி போடும் தன்மையை யுடையன. இது ஒருபுறமிருக்க உற்பத்தி முறைகளும் புதிது புதிதாக மாறிக்கொண்டு வரும். இத்தகைய சூழலில் பொருளா

**சகாதேவன்**

தாரம் வளர்ச்சியடையும் தன்மையை மாத்திரமன்று; நிலை தளம்பும் சலனத் தன்மையையும் கொண்டிருக்கின்றது.

வளர்ச்சி மாத்திரமின்றி நிலை தளம்பும் சலனத் தன்மையையும் கொண்டிருக்கும் பொருளாதாரம் யதேச்சை முறையில் (Laissez Faire) இயங்குமேயாயின் முரண்பாடும் கூடிய சலனத்தன்மையும் மலிந்து விடும். நாட்டுப் பொருளாதாரம் மாறி மாறிச் சுருங்கவும் விரியவும் கூடும். அதன் பாற்பட்டுப் பொருள் உற்பத்தியும் உழைப்புச் சந்தர்ப்பமும், வாழ்க்கைத் தரமும் மக்கள் சுபீட்சத்திற்கு இடையூருக சலனமடையும்.

இவற்றைவிட பொருளாதார வளர்ச்சிக்கு போக்குவரத்து வசதி, மின்சார வசதியாகிய அநேக பொதுச் சாதனங்கள் தேவை. இவை தக்க அளவில் கிடைப்பதற்கு பெருந்தொகை முதலீடு தேவையாகும். நெடுந்தவணைத் திட்டப்படி பொருளாதாரம் இயங்காவிடின் அத்தகைய முதலீடு உருவாகாது. மேலும் ஆதாய நோக்குடன் கருமம் பார்க்கும் யதேச்சை முறையின் கீழ் அத்தகைய முதலீடுகள் நிறைவெய்தா. முதலீடு பெருகுவதற்கு நுகர்ச்சிச் செலவு சமூகத்தில் சுருங்க வேண்டும். திட்டப்படி இயங்காவிடின் இந்த விளைவு கிட்டாது.

மேற்கூறிய காரணங்களின் நிமித்தம் ஒரு நாடு பொருளாதார சுபீட்சம் அடைவதற்கு சமூகம் ஏதோ ஒருவகைத் திட்டமிட்டு கருமமாற்றவேண்டும்.

**உபாத்தியாயர்:**

ஏன் திட்டமிடுவது என்ற விடயம் முடிவாகிவிட்டது.

**குமரேசு:**

அடுத்தபடியாக நாம் கவனிக்கவேண்டியது திட்டமிடுவதில் நாம் மனதிற்கொள்ள வேண்டிய குறிக்கோள்களும் இலட்சியங்களும் ஆகும்.

குறிக்கோள்களை இலகுவில் சொல்லிவிடலாம்.

1. பொருளுற்பத்தியை அதியுன்னத அளவிற்குப் பெருக்கல் (Maximizing production).

2. நாட்டு வருவாய் மக்களனைவருக்கும் சமபான்மையாகப் பங்கிடு செய்யப்படுதல் (Equitable Distribution of Income).

3. மக்களனைவரும் பொருளாதாரத்தில் ஏதோ ஓரோர் தொழிலில் தொடர்ச்சியாக ஈடுபடுவதற்கு இயைந்த அளவு உழைப்புச் சந்தர்ப்பத்தைச் சிருஷ்டித்தல் (High and Stable Level of Employment).

4. மக்கள்தம் வருவாய் சுருங்கியும் விரிந்தும் நிலை தளம்பாதிருத்தல் (Income Stability).

5. விஞ்ஞான ஆராய்ச்சி விருத்திக்கேற்றவாறு பொருளாக்க முறைகள் முன்னேறியும் பொருளுற்பத்தி பெருகியும் வரும் தன்மையுடைய வளர்ச்சி (Economic Growth).

இந்த ஐந்து அம்சங்களையும் உள்ளடக்கிய பொருளாதார சுபீட்சம் பெருகுவதே எத்திட்டத்திற்கும் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

மேற்கூறிய குறிக்கோள்களையெய்துவதற்கு நாம் திட்டமிடும்பொழுது சில இலட்சியங்களை மனதில் அழுத்தமாக வைத்திருக்க வேண்டும். சுபீட்சம் என்பது மனோபீஷ்டத்தைப் பொறுத்தது. ஆங்கிலத்தில் (Subjective) என்று குறிப்பிடுவர். நமக்கு விருப்பமானதொன்று மற்றவருக்கு திருப்தியாக இராது. ஆகவே தனி மனிதனுக்கு நுகர்ச்சிச் சுதந்திரம் இருக்கவேண்டும். அதேபோல தொழிலைத் தெரிவு செய்தலிலும் மக்கட்கு போதியளவு சுதந்திரம் இருக்கவேண்டும்.

சுருங்கச் சொல்லின் தனி மனிதனுடைய சுதந்திரத்தை, அதாவது நியாயபூர்வமான அளவிற்கு அல்லது மற்றையோரின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதிக்காத முறையில் ஒவ்வொருவனும் தன் விருப்பத்திற்கிணங்க நடத்தல் என்னும் தத்துவத்திற்கு பாதகமில்லாத வகையில்தான் சமூகத் திட்டம் அமைய வேண்டும். அதைவிட்டு அரசாங்கம் எதேச்சாதிகாரமாக தனக்கு எது நன்மையென்று தோன்றுகிறதோ அதை மக்கள் மேல் கட்டாயத்தின்பேரில் சுமத்தும் முறையாக இருக்கக்கூடாது இடப்படும் திட்டம். எத்தகைய பொருளாரத்திட்டமும் சமூக மக்களின் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறும் தன்மையதாக பொருந்தவேண்டும்.

**உபாத்தியாயர்:**

அப்புறம் நாம் முன்னர் கவனித்த குறிக்கோள்களை எய்துவதற்கு என்ன வழிவகைகளைக் கையாளவேண்டும் என்பதை ஆராய்வோம்.

**குமரேசு:**

முதற் குறிக்கோளான பொருளுற்பத்தி அதியுன்னத அளவுக்குப் பெருகல் என்பதை எடுத்துக்கொள்வோம். பொருளுற்பத்தி பெருகுவதற்கு கீழே குறிக்கப்பட்ட அம்சங்கள் அமைய வேண்டும்.

1. நுகர்ச்சி குறைந்து முதலீடு பெருகுதல்.
2. தொழிலாளர் செய்திறமை உயர்தல்.
3. இயன்றளவு அதிகமான மக்கள் தொழிலிலீடுபடுதல்.
4. பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களும் முரண்பாடின்றி இசைதல்.

இந்த நான்கு அம்சங்களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன. இவற்றுள் முதலீடு பெருகுதல் திறவுகோல் போல அமையும். முதலீட்டின் அளவும் தரமும் மற்றைய அம்சங்களை பெருமளவில் பாதிக்கும். ஆகவே எத்தகைய திட்டத்திலும் முதலீடு பெருகுதற்குத் தக்க வழிவகைகள் அமைக்கப்பட வேண்டும்.

முதலீடு பெருகுவது மக்களின் தலாவீத வருவாயையும் அவர்களின் சேமிப்புத் தன்மையையும் பொறுத்திருக்கும். பொருளுற்பத்தி குறைவான நாடுகளில் தலாவீத வருவாய் குறையவே முதலீடு பெருகுவது சுலபமான ஒரு கருமமாக அமையமாட்டாது. அதன் காரணமாக பொருளாதார அபிவிருத்தியில் பின்னணியில் நிற்கும் நாடுகளில் தக்க அளவு முதலீடு இயல்பாக உருவாகமாட்டாது. திட்டமிட்டுக் கண்டிப்பான முறைகளையனுசரிப்பதனுலேயே முதலீடு பெருகச் செய்ய இயலும்.

—(அடுத்த இதழில் முடியும்)


# மௌலானு
## அச்சடி சீத்தைகள்



ரமணீகரமாக காட்சியளிக்க
இன்றே தெரிவு செய்யுங்கள்

★ கண்ணைக் கவரும் டிசைன்கள்.
★ சாயம் மங்காதவை.
★ நீடிய உழைப்பு.
★ தூரத்தில் உயர்வானது.

விசேஷமாக வரவழைக்கப்பட்டிருக்கும், புத்தம் புதிய டிசைன்களை, தெரிவுசெய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.

**மௌலானு (சிலோன்) லிமிட்.,**
**கொழும்பு, மருதானை, கண்டி.**



தலை முடியை சிவுவதல்ல உங்கள் பிரச்னை!
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சிவுவது எப்படி என்பதுதான்!

# நேத்திர லோக
உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

# நேத்திரலோக தைலம்

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும் தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை: 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

**டபிள்யு. கே. ஜினதாஸ,**
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்றோட், புறக்கோட்டை
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காங்கிரஸைக் கலையுங்கள்' என்ற அண்ணல்

## காந்தி பழிவாங்கப்படுகிறார் !

## சென்னை கடற்கரையில் அவர் பெயரால் இனந் தெரியாத அவலட்சணச் சிலை

### தமிழ் நாட்டுக்கு ஏற்பட்ட அவமானம் போக்க

### சிற்பக் கலைஞர் மணி அறைகூவல்—மக்கள் எழுச்சி

பொது இடங்களில் சிலை வைப்பது எதற்கு? மக்கள் பார்த்து சிரிப்பதற்காகவா, அல்லது வேறு சீரிய நோக்கத்துக்காகவா?

உண்மை நோக்கம் என்ன என்பது இந்தியப் பேரரசுக்கோ அல்லது சென்னை மாநில அரசுக்கோ தெரிந்திருக்கும் என்று சொல்ல நியாயமில்லை. அப்படித் தெரிந்திருந்தால் உலகம் போற்றும் உத்தமர் காந்தியை சென்னையிலே சந்தி சிரிக்க வைத்திருக்க மாட்டார்கள், அவரின் சீடர்கள் என்று முத்திரை வேறு பதித்துக்கொண்டிருப்பவர்கள்.

கொடுமை

அவர் தமது ஆயுட் காலத்தில் காங்கிரஸைக் கலைத்து விட வேண்டுமென்று கருத்து வெளியிட்டார். அதற்காகப் பழி வாங்கும் முறையில் வெண்கலத்திலே குரங்கு போன்ற ஒரு உருவத்தை வார்த்து காந்தி என்று பெயரிட்டுக் கடற்கரையில் நிறுத்தி அவருடைய மானத்தை வாங்கி வருகிறார்களோ என்னவோ! இது கொடுமை; கொடுமையிலும் கொடுமை!

அவமானம்

காந்தியின் சாயலே இல்லாத ஆபாசச் சிலையை அவர் என்று சொல்லி நிறுத்தியிருப்பது அவருக்குக் களங்கம் என்பது ஒருபுறம். மறுபுறம், சென்னைக்கே அவமானம். சிற்பக் கலையில் சிறந்து விளங்கும் தமிழ் நாட்டுக்கே தீராத அவமானம்.

குரங்குச் சிலை!

கடற்கரையில் உள்ள சிலையைக் காந்திச் சிலை என்று இதுவரை மனதார ஒப்புக்கொண்டவர் எவருமில்லை. பிரதமர் நேரு மட்டும் சமீபத்தில் தமிழ் நாடு வந்த போது அதைக் காந்தி சிலை என்று சொல்லித் திரை நீக்கம் செய்து வைத்தார். இன்னும் அதை அங்கு நிறுத்தி வைத்த அதிகாரிகளும் காந்தி சிலையைத் தாம் நிறுத்துகிறோம் என்று சொல்லித் தான் செய்தார்கள். சிலையைச் செய்த வடநாட்டு சிற்பி(?) ராய் சவுத்திரியும் தாம் காந்தி சிலை செய்வதாக எண்ணித்தான் அதைச் செய்து முடித்தார். ஆக, சிலையை நிர்மாணித்தவருக்கும், நிறுத்தி வைக்கப் பொறுப்பாயிருந்த அதிகாரிகளுக்கும், திரை நீக்கம் செய்து வைத்த பிரதமர் நேருவுக்கும் தான் அது காந்திச் சிலை! ஏனையோருக்கெல்லாம் அது குரங்குச் சிலை!

குழந்தைகள் கண்டதும் வெருண்டு ஓடுகிறார்கள். வெந்து சுருண்ட பிணம் போலவும் இனந் தெரியாத பயங்கர மிருகம் போலவும் அந்தச் சிலை குழந்தைகளுக்குத் தெரிவதால் வீரிட்டு அழவும் செய்கிறார்கள்.

ஆபாசம்

ஏழைகளின் வரிப் பணத்தில் ஐம்பதினாயிரம் ரூபாயை வட நாட்டாருக்கு வாரி இறைத்து இந்த ஆபாசத்தை வாங்கிக் கட்டிக் கொண்டு வந்து சென்னையில் நிறுத்தி மக்கள் வயிற்றெரிச்சலையும் தென்னாட்டுச் சிற்பக் கலைஞர்கள் கோபக் கனலையும் கிளப்பி யிருக்கிறார்கள். இன்றைய நிலையில், கடற்கரைச் சிலை எப்போது கடல் அலையோடு அள்ளுண்டு போகும் என்று சொல்ல முடியாது. மக்கள் எதிர்ப்பு அவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறது. பலர் பகிரங்கமாகவே கண்டித்திருக்கிறார்கள்.

களங்கம்

சிற்பக் கலைஞர்களைப் பொறுத்தவரையில் எம். என். மணி என்பவர் தமது சொந்தச் செலவில் வேண்டுமானால் அருமையான காந்தி சிலை செய்து தருவதாக அறிவித்திருக்கிறார். "இப்போது உள்ளதை உடனடியாக அகற்றுங்கள்; நமக்கெல்லாம் ஏற்பட்ட களங்கத்தைத் துடையுங்கள்" என்று அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்.

சிற்பக் கலைஞர் மணி

பரம்பரைச் சிற்பக் கலைஞரான திரு எம் எஸ் நாகப்பனுடைய மகன்தான் திரு எம். என். மணி. சிற்பக்கலையில் மிகவும் கை தேர்ந்தவர். இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அங்கு சென்று பல பெரியார்களின் சிலைகள் செய்து வருகிறார். சமீபத்தில் நாம் அவரை அவரது நரசிங்கபுரம் ரோடு ஜாகையில் சந்தித்த போது கிழக் கிலங்கையிலுள்ள மட்டக்களப்பில் வைப்பதற்கு ஒரு காந்தி சிலையைச் செய்யவும் தாம் இப்பொழுது ஒப்புக்கொண்டிருப்பதாகக் கூறினார்.

முடிவு?

காந்திக்கு ஏற்படுத்தப்பட்ட களங்கம் நீக்கப்படுமா? தமிழ் நாட்டுச் சிற்

சுதந்திரன் சென்னை நிருபர்

ஈழத்தரசன்

பக்கலையின் சிறப்பை நிலை நாட்ட வாய்ப்பு அளிக்கப்படுமா? தமிழன் தன்னுடைய தலை நகரிலே உலகப் பெரியாருக்கு நல்ல சிலை வைத்து மகிழும் உரிமை அளிக்கப்படுமா? விரைவில் தெரியவரும் முடிவு தமக்கு யாரும் சிலை வைப்பதையோ படம் திறந்து விழா நடத்துவதையோ விரும்பாதவர் காந்தி. அவரின் விருப்பம் நிறைவேறினாலும் நிறை



காந்தி சிலை என்று சொல்லி சென்னை கடற்கரையில் வைக்கப்பட்டுள்ள சிலையும் (இடது புறம்) தமிழ் நாட்டுச் சிற்பக் கலைஞர் திரு மணி செய்த காந்தி சிலை (வலம்) ஒன்றும்.

சென்னைக்கடிதம்

வேறலாம். அரசாங்கத்தின் முடிவைப் பொறுத்து இருக்கிறது எல்லாம்.

## இலங்கை தி. மு. க. செய்தி எதிரொலி

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம் சமீபத்தில் கொழும்பில் நடத்திய மே தின விழாக் கூட்டத்தில் கொள்கை விளக்கம் செய்த செய்தி கடந்த வாரச் சுதந்திரனில் வெளிவந்ததைத் தொடர்ந்து சென்னை தி. மு. க. வட்டாரத்தில் பெரிதும் மனத் தாங்கல் நிலவத் தொடங்கியிருக்கிறது.

கட்சித் தொண்டர்கள் இது விஷயத்தை தலைவர்கள் கவனத்துக்குக் கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

புதுச்செய்தி

"தமிழ் நாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் இலங்கைத் திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் தாய்க் கழகம் என்று எல்லோரையும் நம்ப வைக்கும் வகையில் சிலர் பிரசாரம் செய்து வருகிறார்கள். இதைக் கேட்டு யாரும் ஏமாந்து விடக் கூடாது.

"தமிழ் நாட்டுத் தி. மு. கழகம் வேறு; இங்குள்ளது (இலங்கை) வேறு. இரண்டுக்கும் தொடர்போ, ஒட்டுறவோ, நேசமோ, பாசமோ எதுவும் கிடையாது. நமது கழகத்துக்கு தனியான கொள்கையுண்டு. அது இங்கு சுதந்திரமாகத் தனித்து இயங்குகிறது. நமது கழகத்துக்கு தமிழ் நாட்டு தி. மு. கழகத்தின் ஆணையை ஏற்று ஒழுக வேண்டிய அவசியமும் இல்லை; அவசரமும் இல்லை."

மேற்கண்டவாறு கொழும்புக் கூட்டத்தில் தலைமை வகித்த இ. தி. மு. கழக முக்கியஸ்தர் அறிவித்ததாகப் பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இழுக்கு

இங்கு (சென்னை) உள்ள கழகத் தோழர்களுக்கு இருக்கும் கவலை இலங்கை தி. மு. கழகம் தனித்த ஒன்றாக, தமிழ் நாட்டுத் தி. மு. க. வோடு தொடர்பு இல்லாமல் இயங்கப் போகிறதே என்பது அல்ல. தமிழ் நாட்டுத் தி. மு. க. மிகுந்த செல்வாக்குப் பெற்று, அரசியல் ஆதிக்கமும் கூடக் கிடைக்கப் பெற்று வரும் இத் தருணத்தில் அதற்கு ஒருவகையில் இழுக்குத் தேடும் முறையில் இலங்கை தி. மு. க. நடந்துகொள்ளுகிறதே என்பதுதான் அவர்களுக்குவருத்தம் கொடுப்பதாகத் தெரிகிறது.

"இலங்கையில் கழகம் இருந்து இப்படி தமிழ்நாட்டு தி. மு. கவினரின் முகத்தில் கரி பூசுவது போன்ற செய்கைகளில் ஈடுபடுவதைவிட கழகம் என்று ஒன்று இல்லா தொழிந்து போவது மேல்" என்று ஒரு தோழர் மனம் வருந்திக் கூறினார்.

### மந்திரி சபையில் கொசுக்கடி!

மந்திரி சபையில் நெருக்கடி என்று தினப் பத்திரிகைகள் எல்லாம் அமர்க்களப் படுத்துகையில் சுதந்திரன் மட்டும் நெருக்கடி பற்றி எதுவும் எழுதாத காரணம் என்ன என்று சில நேயர்கள் கேட்கிறார்கள்.

எந்த மந்திரியும் பதவியை விட்டு வெளியேற இன்னும் தயாராகவில்லை யென்பதும் எது வரினும் அமைச்சர் நாற்காலியில் அட்டைபோல் ஒட்டிக் கொண்டிருப்பதே ஒவ்வொருவருடைய நோக்கமாக இருக்கிறதென்பதும் சுதந்திரன் அறிந்து கொண்ட விஷயம். இந்த நிலையில்நெருக்கடி யென்ற பேச்செல்லாம் இதுவரை வெறும் கொசுக் கடிதான்!

பழைய செய்திகள்

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து வந்த செய்தி இலங்கை தி. மு. கழகத்தில் பிளவு ஏற்பட்டு இருக்கிறது என்றும் கட்சித் தோழர்கள் அவரவரே பெரும் பதவி வகிக்க விரும்பி மூலைக்கு மூலை கழகம் நிறுவி நடத்த முனைந்ததாகக் கூறியது அதை அடுத்து வந்த செய்தி இரண்டு கழகங்களும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கூட்டங்கள் நடத்துவதிலும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதிலும் ஈடுபட்டிருப்பதாகக் கூறியது. ஒன்றை ஒன்று திட்டித் தீர்த்ததாகவும், பெரியதும் உண்மையானதும் எது என்ற சர்ச்சையில் இறங்கி நாய் கடி பூனை கடியாகக் காலங் கழித்ததாகவும் மேலும் அந்தச் செய்தி கூறியது.

வருத்தம்

மேற்படி செய்திகளைக் கேட்டுக் கேட்டு அதிருப்தியும் அடங்கா வேதனையும் அடைந்த தமிழ் நாட்டு தி. மு. கழகத் தோழர்களுக்கு கடைசியாகக் கிடைத்திருக்கும் செய்தி மகிழ்ச்சி யளிக்கும் என்று எதிர்பார்க்கத் தான் முடியுமா?


புகார்

இலங்கை தி. மு. க. என்ற பேச்சை எடுத்தாலே சீறி விழுகிறார்கள். அவ்வளவு ஆத்திரம் அவர்களுக்கு. தலைமைக் கழகத்துக்கு எழுதிப் புகார் செய்வதோடு முக்கிய தலைவர்களுக்கும் தனி தனியாக நகல்கள் அனுப்பி, தக்க நடவடிக்கை எடுக்கும்படி செய்வதென்ற முடிவோடு இருக்கிறார்கள்.

அனேகமாக தமிழ் நாடு தி. மு. கழக மேலிடம் இலங்கைத் தி. மு. கழகத்திடம் முதலில் சிநேக பூர்வமான முறையில் கொள்கை விளக்கம் கோரும் என்றும் அதன் பிறகே ஏதாவது நடவடிக்கை எடுப்பதா என்பது பற்றி முடிவு செய்யும் என்றும் உறுப்பினர் வட்டாரங்களில் பேசப்படுகிறது.


சிக்கனமானது! பிரகாசமுள்ளது!

உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு



நாஷனல் றேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:- எஸ். யூ. மொகமெட் ஹாஜீயார்,

70, டாம் வீதி, கொழும்பு-12. 143, மெயின் வீதி, காலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமசமாஜிஸ்டுகளா? அவர்களை நம்பியும் பயனில்லை தமிழர்களுக்கு

## இனப் பிரச்னையை தீர்ப்பது முதல் காரியம் பின்னர்தான் பொருளாதாரம்

## சமஷ்டி அரசமைப்பே ஏற்றது தமிழரசுக் கட்சி கூறும் வழி விவேகமானது

### மட்டக்களப்பில் அட்வகேட் தவராசா

மட்டக்களப்பு அட்வக்கேட் திரு ஏ. தவராசா தமிழ் பேசும் மக்கள் சிந்தனைக்கும், தமிழர், சிங்களவர் தலைவர்களின் கவனத்துக்குமுரிய பொருள் பொதிந்த பேச்சு ஒன்றை கடந்த 31-3-59ல் மட்டக்களப்பில் தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 61-வது பிறந்த தினம் கொண்டாடப்பட்டபோது நிகழ்த்தினர்.

காலம் கடந்துவிட்டாலும், அன்று அவர் பேசியகருத்து இன்றைக்கும் பொருந்துமாகையால் இங்கு மகிழ்ச்சியுடன் அதைத் தருகிறோம். திரு தவராசா ஆங்கிலத்தில் பேசியதன் தமிழாக்கமே இங்கு தரப்படுகிறது.

திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 61-வது பிறந்த தினத்தைக் கொண்டாடும் மகிழ்ச்சியில் நானும் பங்கு கொள்ள இடம் அளித்ததற்காக வைபவத்தை ஒழுங்கு செய்தவர்களுக்கு மிக்க நன்றி உடையவனாக இருக்கிறேன்.

நிதான புத்தியுடைய மக்கள், தமிழர் தலைவர் திரு செல்வநாயகத்தின் நண்பர்களாயிருந்தாலும் சரி, எதிரிகளாயிருந்தாலும் சரி அவருடைய நல்ல பண்புகளையும் பெருந்தன்மையையும் வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது.

அவருடைய மாறாத துணிவு, கடமையெனக் கொண்டதில் கண்டிப்பான ஈடுபாடு, பொதுநலப் பண்பு, நேர்மைக் குணம்—இவை இருள்சூழ்ந்த தமிழர் சமுதாயத்தில் ஒளிபரப்பும் விழுமிய கதிர்களாகத் திகழ்கின்றன.

#### நிலை குலையவில்லை

தற்போதைய எம். ஈ. பி. அரசாங்கத்தின் வகுப்புவாதக் கெடுபிடிகளால் வேண்டுமென்றே தோற்றுவிக்கப்பட்ட இருள் மண்டலத்துக்கு தாக்குப் பிடித்துக் கொண்டு நிலைகுலையாது நின்றார் திரு செல்வநாயகம். இருள்சூழ வைத்தது போதாதென்று பின்னர் மின்னலும் முழக்கமும் கூடவே புயலும் வீச வைக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம். மே 58ல் இனக் கலவரம் ஏற்பட்டபோதும் அதன்பயனாகப் பலரின் தலைகள் உருண்டபோதும்கூடத் திரு செல்வநாயகம் நிலை குலையவில்லை; நிதானம் இழக்கவில்லை.

#### தலைவர்கள் பிரிந்த தினம்

சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னர் இப்பெரியார் மட்டக்களப்புக்கு வந்தார். இன்னுமொரு பெரியவரோடு சேர்ந்து வந்தார். இருவருமே அப்போது தமிழ்க் காங்கிரஸ்மூலமாக தமிழினத்தை வழிநடத்தி வந்தார்கள். இன்று இருவரும் ஒன்றாக இல்லை. தமிழினம் கூறுபட்டுப் போக விட்டுவிட்டுத் தலைவர்கள் இருவரும் பிரிந்து தத்தம் வழியே சென்ற தினம் தமிழ் பேசும் மக்களுக்கு நல்ல தினம் என்று சொல்வதற்கில்லை.

#### இடதுசாரிக் கட்சிகள்

இடதுசாரி அரசியல் கட்சிகள் இருக்கின்றன. அவை தமிழருக்கு நேசக் கரம் நீட்டுகின்றன. நாட்டு மக்களை வாட்டும் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அவை உண்மையான ஆர்வம் காட்டுகின்றன. தமிழுக்கு சிங்களத்தோடு ஒத்த சமஅந்தஸ்து வழங்கவும் அவை தயாராக இருக்கின்றன. ஆனால் தீர்க்க வேண்டிய பிரச்னைகள் பொருளாதாரப் பிரச்னைகள் மட்டுமல்லவே. தற்போதைய அரசியல் நிலையைச் சரியானபடி பரிசீலனை செய்து பார்ப்பவர்களுக்கு இது தெற்றென விளங்கும்.

#### சமசமாஜிகள்

இப்போது உள்ளது வெறும் பிரச்னை அல்ல. இன நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அரசியல் தலைவர்களையும் சிந்தனையாளர்களையும் எதிர்கொண்டிருப்பது இது தான்.

லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள் திறமைசாலிகள், நேர்மையாளர்கள், நீதி நியாயத்திலே நம்பிக்கையுள்ளவர்கள்—சற்று ஆறுதலாக நின்று தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கையை உணர விழைய வேண்டும்.

#### நம்பிக்கெட்ட கதை

கடந்த காலத் தமிழ்த் தலைவர்கள் தமது சிங்கள நண்பர்களில் நம்பிக்கை வைத்தார்கள் என்பதை மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். இந்த நம்பிக்கை மோசம் செய்யப்பட்டது என்பதை சமசமாஜத் தலைவர்கள் அறிவார்கள்.

[illegible] தலைவர்களை நம்பினார்கள். அந்தத் தலைவர்களாலேயே கேடு சூழ்ந்தது தமிழருக்கு.

இதை நினைவுகூர்ந்துகொண்டால் தமிழர்கள் இனிமேலும் வாக்குறுதிகளால் வழிநடத்தப்படுவதை விரும்பவில்லை என்பதை இலகுவில் புரிந்துகொள்ளலாம்.

#### சிங்களவரின் தலைமை வேண்டாம்

டி. எஸ். சேனநாயகாவுக்குப் பின்னர் டட்லியும் ஜெயவர்த்தனவும் கிடைத்தார்கள். என். எம். பெரேராவுக்குப் பின்னர் கொல்வின் ஆர். டி. சில்வாவும் லெஸ்லிகளும், ராபர்ட்டுகளும். இவர்களிடமிருந்து தமிழ் மக்கள் எதைத்தான் எதிர்பார்க்கலாம்? அதுவும் பிலிப்பும் தஹநாயகாவும் பெரிய சோஷலிஸ்டுகளின் வாழும் நினைவுச் சின்னமாக இருக்கும்போது!

இனஉணர்வு பொருளாதார நோக்கை ஒதுக்கிவிட்டது; இல்லை துரத்தியே விட்டது. இன்று எங்கள் மத்தியில், நாணித் தலைகுனிய வேண்டிய அளவு மோசமான வகுப்புவாதத்தைக் கக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள சோஷலிஸ்டுகள்—பெயர்வாங்கிய சோஷலிஸ்டுகள் இருக்கிறார்கள். இதனால்தான் அவர்களின் உறுதிமொழிகளைத் தமிழ் மக்கள் கேட்கத் தயாராக இல்லை.

#### ஹங்கேரியும் இலங்கையும்

நடைபெறுவது உண்மையிலேயே இன நெருக்கடிதான். பொருளாதாரத்தைவிட இனவியல் அடிப்படையானது. 19வது நூற்றாண்டில் ஹங்கேரியில் மகியார்ஸ் இனத்தவர்கள் சேர்ப் இனத்தவருக்கும் கிரோட் இனத்தவருக்கும் இழைத்த கொடுமைகளைத்தான் இங்கு சிங்களவர்கள் இன்று சிறுபான்மையினமான தமிழர்களுக்கு செய்து வருகிறார்கள்.

#### சமஷ்டி

தமிழரும் சிங்களவரும் நண்பர்களாக ஒத்து வாழ வேண்டுமானால் சமஷ்டி அரசியல் அமைப்பில்தான் அது சாத்தியமாகும். கடந்த இரண்டு வருடங்களிலும் நடந்த சம்பவங்கள் இந்த நம்பிக்கையை ஸ்திரப்படுத்துகின்றன. ஒரு மடையனைக் கேட்டால்கூட அவன் சொல்லுவான், சமஷ்டி ஆட்சி அமைப்பு என்றால் பிரிந்து செல்லும் மார்க்கம் அல்ல, ஒன்று சேர்ந்து வாழ வழி அது என்று.

சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்தி ஏற்படுத்தப்படும் ஒற்றையாட்சிக்கும் பிரிவினையாட்சிக்கும் இடையில் மத்திய வழியாக விளங்குவது சமஷ்டி யாட்சிமுறை என்பதை நேர்மையுள்ளவர்கள் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

#### சரியான பரிகாரம்

சமஷ்டி ஆட்சி அப்படி ஒன்றும் கெட்ட சரக்கல்ல. கொம்யூனிஸ்டு நாடான சோவியத் ருஷ்யாவில் சமஷ்டி ஆட்சி உண்டு. முதலாளித்துவ நாடான அமெரிக்காவிலும் கூட சமஷ்டி ஆட்சி நடைபெறுகிறது. ஆகவே, நாட்டில் முதலாளித்துவ அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டாலும் சரி, கொம்யூனிஸ்டு அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டாலும் சரி, இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு தமிழரசுக் கட்சி கூறும் பரிகாரத்தைத் தைரியமாக, நேர்மையாக, கவனமாகப் பரிசிலித்துத்தான் ஆக வேண்டும்.

#### இரண்டு வழிகள்

தமிழர்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் எந்தக் கட்சியும் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இது வரை எதுவித வழியும் சொன்னதாக இல்லை. தமிழரசுக் கட்சி ஒன்றுதான் மார்க்கம் தெரிவித்திருக்கிறது. மற்றக் கட்சிகள் எல்லாம் இனப் பிரச்னையையும் மொழிப் பிரச்னையையும் தீர்ப்பதற்குத் தமிழரசுக் கட்சி கூறியுள்ள வழிகளைக் கண்டிப்பதிலும் கேலி செய்வதிலுமே தமது நேரத்தைச் செலவு செய்து வருகின்றன.

இன, மொழிப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு இரண்டு வழிகள் உண்டு. இரத்தப் புரட்சி செய்வது ஒரு வழி. நல்லெண்ணத்தோடு சமாதானமாக அறப்போர் நடத்துவது மற்ற வழி. இவற்றில் இரண்டாவது வழியையே தமிழ் மக்கள் இயற்கையாகவே கடைப்பிடிப்பார்கள்.


#### இனப்பிரச்னை முதலில் தீர வேண்டும்

நாட்டுக்குப் பொதுவான சுபீட்சம் கிடைக்கச் செய்யவும் சகலரும் நலம் பெறுவதற்கும் சிங்களவர்களும் தமிழர்களாகிய நாமும் ஒன்றாக வாழ வேண்டும். தவிர்க்க முடியாதது இது. இன மோதுதலுக்கான காரணங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவை பூரணமாக இல்லாதொழிக்கப்பட்டதும் நாம் ஒன்றாக வாழ்ந்து ஒருமித்து உழைக்கலாம். இதுதான் நடைமுறைக்குப் பொருத்தமானது.

இனப் பிரச்னையைத் தீர்க்காமல் விட்டு விட்டு பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கப் புறப்படுவது வேடிக்கையானதாகும். நோயையும் அதற்கான காரணத்

(11-ம் பக்கம் பார்க்க)


மொரிஸன் பம்புகள்



நெருக்கிப் பொருந்திய விவசாயத்திற்குரிய பம்புகள் மண்ணெண்ணெயால் தாமே இயங்கவும், நீடித்த பாவனைக்கும் உத்தரவாதமுள்ளவை.

1½, 2, 2½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

கே. என். அப்துல் காதர் ராவுத்தர் அன் கம்பெனி லிமிட்டெட்,
312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10.
டெலிபோன்: 2956. தந்தி: MEDAL.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:
ராஜா ஸ்டோர்ஸ், 2/B, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.



வரதர் வெளியீடு

சைவ சமய பாடத் திரட்டு
(SAIVISM)

G. C. E. வகுப்பு சைவ சமய பாடம் புதிய பாடத் திட்டத்தின்படி தொகுக்கப்பெற்றது.
பதவுரையும் விசேட குறிப்புகளும் அடங்கியது.

எழுதியவர்:
வித்துவான் பொன். முத்துக்குமாரன் பி. ஓ. எல்.,
பண்டிதர் ச. பஞ்சாட்சர சர்மா

மிக விரைவில் வெளிவருகிறது !

விற்பனையாளர்:
ஆனந்தா அச்சகம்--புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
போன் : 348


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைலாசம் கண்டேன்



18

சுவாமி சச்சிதானந்தா

## கௌரி குண்டம்

ஆகா, என்ன விந்தை! இது தடாகமா, அல்லது கண்ணாடிப் பெட்டிக்குள் தண்ணீர் தங்கி இருக்கிறதா, என்ற சந்தேகமே ஏற்பட்டது. பொய்கையின் நீர்ப்பரப்பை உறைபனி மூடியுள்ளது. அப்பனிப் படலம்தான் பளிங்கெனக் காட்சி தருகிறது. இதனைச் சுற்றிலும் சூழ்ந்து நிற்கும் பனியாடை போர்த்த குன்றுகள் பளிங்கு மலைகளெனத் திகழ்கின்றன. அவ்வமயம் ஒரு குன்றின் சரிவிலிருந்து பனிப்பாறை பெயர்ந்து சரிந்து வந்து கௌரியில் விழுந்தது. பனிப்பாறையை உதிர்த்து நிற்கும் குன்று 'பார்வதி' எனப்படுகிறது. குளிர் நிறைந்த கௌரி குண்டத்தில் எல்லா நேரமும் நீராட முடியாது. எல்லாராலும் நீராடாவும் முடியாது. தாங்கரிய அதன் குளிர் தனித்ததோர் அனுபவத்தை ஊட்டி நிற்கும். ஆத்மாவேறு, உடல்வேறு என்று உதட்டளவிற் பேசும் வேதாந்தம், கௌரி குளஸ்நானத்தில் உண்மையாகிவிடும்.

## இறையருள்

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது கௌரியில் நீராடுவதா! விடுவதா! என்ற திகைப்பு. 'கயிலை யாத்திரையின் சாதனை கௌரியில் நீராடுவதனாலேயே நிறைவேறும்'



ஞாண்டன் கும்பாவுக்கு முன்னால் மந்திரம் பொறிக்கப்பட்ட கல்லடுக்குகளின் மத்தியில் புத்தபெருமானின் இந்தக் கற்சித்திரம் காணப்படுகிறது.

என்ற சிந்தனை ஒருபுறம் தூண்டிற்று. புனித தீர்த்தத்தில் நீராடிக் கௌரிக்கும் கயிலை நாதனுக்கும் முறைப்படி வழிபாடு செய்யும் ஆவல் மேலிட நீராடத் தயாரானோம். அதை வரவேற்பதுபோல எதிர்பாராத விதமாக கார் முகிலும் கலைந்து சென்றது. கதிரோனும் சுடுகிரணங்களை உடம்பின் மேல் தூவி நின்றான். இவையனைத்தும் இறையருளே. எம் பெருமாட்டியின் அருளை என்னவென்று கூறுவது! கூறவியலாத இன்பவுணர்ச்சி; நன்றியின் பெருக்கு.

## மூழ்கியவர் உணர்ச்சி இழந்தார்

நீரை மூடிக்கொண்டிருந்த பனிப் பலகையைக் கைத்தடியால் அடித்து உடைத்து விட்டுக் கீழேயுள்ள பனி நீரைக் கண்டோம். சிலர் மானஸீகமாகவே ஸ்நானத்தை முடித்துக் கொண்டனர். உள்ளிறங்கிய ஒரு அன்பர் உணர்ச்சி இழந்தார். ஆபத்து ஒன்றுமில்லை. உடனே மேலிழுத்து உடம்பைத் துவட்டிக் கம்பளத்தால் கால் கைகளைத் தேய்த்துச் சூடாக்கினோம். சிறிது நேரத்தில் மூர்ச்சை தெளிந்து எழுந்தார். சிலர் ஒரு முறை நீரில் மூழ்கி எழுந்தனர். ஒரு முறை அமிழ்ந்து எழும்பியதே பெரும் சாதனைதானே! அம்பிகையின் அருட் கடலில் திளைத்து எழுந்தவர் போலானார்கள். யாத்திரை முழுவதுமே உடம்பில் சட்டைத்துணி எதுவுமின்றி இரண்டொரு

பிரேமாநந்தஜியும் சில முறை மூழ்கி எழுந்தார்.

## மும்முறை மூழ்கினேன்

அடியேன் எம் பெருமானை நினைந்து ஒரு முறையும், அன்பர்களை நினைந்து ஒரு முறையும், சர்வலோக க்ஷேமத்திற்காக ஒரு முறையும் மூழ்கி எழும் பாக்கியம் பெற்றேன். அதற்குமேல் முடியவில்லை. கரை சேர்ந்துவிட்டேன். உடலைத் துவட்டுதற்கு முன் உயிர் துவண்டுவிட்டது. அன்னையின் அருளைப் பெற்ற நாம்தேவியைப் போற்றிப் பிரார்த்தனை செய்தோம். அது முடிந்ததும் பன் முறை வீழ்ந்து அன்னையை வணங்கினோம். மணி 12 ஆயிற்று. கடிகாரத்தின் முட்கள் கீழ் நோக்க ஆரம்பித்தன. எங்கள் யாத்திரையின் திருப்பமும் ஆரம்பித்தது.

## ஜென்டல்புக் கும்பா

அடுத்துள்ள 'ஜென்டல்புக்' கும்பாவிற்குச் செல்லும் பாதை செங்குத்தான இறக்கமும், குளிருமாயிருந்தது. வழியெல்லாம் பனியுறைந்து பாளம் பாளமாக வெடித்திருந்தது. சிறிது தூரம் இன்னல் நிறைந்த இடந்தான். பிறகு பாதை ஓரளவு சமதரையாக நதிக்கரை வழியே சென்றது. மாலைப் பொழுதில் கயிலையில் கீழ்த் திசையில் அமைந்த ஜென்டல்புக் கும்பாவை அடைந்தோம். அப் பௌத்த மடத்தின் சூழ்நிலையில் கைலாச தூபம் எனப்படுகின்ற செடிகள் நிறையப் படர்ந்துள்ளன. அதை நிழலிலுலர்த்தி நறுமணத் தூபமிடப் பயன்படுத்துகின்றனர். அன்றிரவு அங்கு தங்கினோம்.

## தார்ச்சனுக்குத் தனிப்பயணம்

ஜூலை 19-ந் திகதி காலை ஏழு மணிக்கு உடன்வந்த யாத்திரிகர் அனைவரும் கிளைவழியாக 'ஞாண்டங் கும்பா' சென்றனர். நான் குதிரை வீரர்களோடு நேரே தார்ச்சன் நோக்கிப் புறப்பட்டேன். மழையும் குளிரும் மாறி மாறித் தாக்கின. 11 மணிக்குத் தார்ச்சனை அடைந்து கூடாரத்தை அமைத்துத் தங்கினேன். பசிவரக் கைவசமிருந்த பரோட்டா கருப்பட்டியோடு வயிற்றினுள் சென்றது. குடிக்கத் தேநீர் இல்லாதது கு[illegible] மழைத் தூறல் [illegible] குறைய வெளியே தலையை

றேனே, கடல் சூழ்ந்த தீவின் மத்தியில்வதிகிறேனேஎன்று எண்ணத்தக்கதாக் கூடாரத்தைச் சுற்றி வெள்ளம் பெருகி நின்றது. மழை விட்டதும் தார்ச்சனின் வளத்தைப் பார்க்கப் புறப்பட்டேன். அங்கே தார்ச்சனின் ராஜா (பூட்டான் ஏஜன்ட்) அவர்களின் கட்டடம் ஒன்று காட்சி தந்தது. மீதியெல்லாம் மிலம், திபெத் வியாபாரிகள் வேனிற்காலத்திற் பண்ட மாற்றுதலுக்காக வந்து தங்கியிருந்த கூடாரங்களே. அவ்வாறு தங்கும் தற்காலிக கிராமத்தை 'மண்டி' என்று கூறுவார்கள்.

தார்ச்சனிலிருந்துதான் கைலைப் பிரதக்ஷிணப் பாதை ஆரம்பிக்கிறது. இந்த இடம் சுமார் 16,000 அடி உயரமானது. கர்பியாங் பாதை வழியாக வருபவர்கள் இங்கு வந்து தங்கி மலைப் பிரதக்ஷிணத்தைத் தொடங்கி மீண்டும் இங்கேயே வந்து முடிப்பார்கள்.

## அறிமுகம்

ஊரைப் பார்க்கச் சிறிது தூரம் சென்றதும் மீண்டும் மழை தூறியதாற் கூடாரத்திற்குத் திரும்பினேன். சற்று நேரத்தில் நான் தார்ச்சன் வரும்போதே தூரத்திலிருந்து என்னைக் கண்டுகொண்ட சுவாமி முத்தாநந்தஜி என்னைத் தேடி வந்து அறிமுகமானார்கள். சுவாமி என்னை முன்பே அறிந்திருந்தார். சிவாநந்த ஆசிரம தோட்டத்தில் வசிக்கும் அவர்களை அன்றுதான் நான் அறிந்தேன். சுவாமிகள் மௌன நிலையிலும் தன்னை அறிமுகப்படுத்திப் பால்நிறைந்த தேநீர் தந்து உபசரித்தார். தேநீர்க் குறை ஆச்சரியப்படத்தக்க வண்ணம் நிறைவாகியது. அதற்குள் கிளை வழியாக ஞாண்டன்கும்பா போன மற்றைய நண்பர்களும் வந்து சேர்ந்துகொள்ள அனைவரும் கூடி சுவாமிகளுடன் புறப்பட்டுக் கடை வீதிகளைச் சுற்றிப் பார்த்தோம்.

## ராஜ அரண்மனை

சுவாமி அவர்கள் இராஜ அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள். அரண்மனை என்றால் ஏதோ மைசூர் இராஜபவனத்தைப்போலிருக்குமென எண்ணிவிடலாகாது. தார்ச்சனிலிருக்கும் அந்த ஒரே ஒரு கட்டடம், மண்ணாலும், கல்லாலும் சற்றுப் பெரிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. ஒரு மேல் மாடியுமுண்டு. முத்தாநந்தஜியைக் கண்ட மன்னர் முகமலர்ந்து இருவரையும் வரவேற்றார். அரசனின் மனைவி பத்தாவுக்கேற்றபதிவிரதை. பக்தியோடு சாதுக்களை உபசரிக்கக் கண்டேன். நிறைய உப்புத் தேநீர் தந்துதவினர். இவர்கள் வருடந்தோறும் ஏப்ரல் முதல் அக்டோபர் வரை ஆறு மாதங்கள் தார்ச்சனிலேயே தங்குகிறார்கள். தார்ச்சனுக்கும், அதைச் சுற்றிச் சில மைல் விரிந்த இடத்துக்கும் உரிமையாளர் பூடான் அரசாங்கத்தினராவர். ஆகையால் அங்கு கூடும் மண்டியில் வரி வசூலிக்கவும், மற்றும் அலுவல்களைக் கவனித்துக்கொள்ளவும் அமைந்த பிரதிநிதியாக இவர் உள்ளார். அன்றிரவு அரண்மனை ஆலயத்தில்



கைலாசத்தின் ஒரு தோற்றம். இப்படத்தில் தூபியும் சேர்ந்து பிடிபட்டிருப்பதைக் காண்க.

மிலம் வியாபாரிகள் ஏற்பாட்டின்படி சத்சங்கம் நடைபெற்றது. சுவாமி பிரேமாநந்தஜி தெய்வ வழிபாடுபற்றி எடுத்துக் கூறினார், எமது சாந்தி பாடத்துடன் சத்சங்கம் முடிந்தது.

## கயிலைப் பரிக்கிரம முடிவுக்காக விருந்து

ஜூலை 20ந் திகதி காலை எல்லோர் உள்ளத்திலும் மகிழ்ச்சி நிறைந்திருந்தது. கைலயங்கிரியைப் பிரதக்ஷிணம் செய்து முடித்த வெற்றி முகத்திற் பொலிந்தது. குதிரை வீரர்களும் மற்றும் உடன் வந்த யாத்திரிகர்களும் ஒன்று சேர்ந்து விருந்துண்டோம். அன்று பெரிய கொண்டாட்டம். ராஜ தம்பதிகளும் விருந்திற் கலந்துகொண்டனர். மாளிகையில் வசித்த மன்னருக்குக் கூடாரவாசிகளின் உபசரிப்பு இதுவே முதல் முறையாகும். மாளிகையில் வசித்தாலென்ன, குடிசையிற் குடியிருந்தாலென்ன அன்புப் பிணைப்பு அனைவரையும் ஒன்றுபடுத்திச் சிறப்பினைத் தரும்.

## ஞாண்டன்கும்பா

மற்ற நண்பர்கள் நேற்றுக் கண்டு களித்து வந்த ஞாண்டன்கும்பாவை நானும் பார்க்க விரும்பினேன். சிறிது ஓய்வுக்குப்பின் சுவாமி முத்தாநந்தஜியுடன் புறப்பட்டேன். ஒரே ஏற்றம்; சுமார் 3 மைல்கள் நடந்து அதனையடைந்தோம். கும்பாவின்முன் படிக்குப் படி நாய்கள் காவல் புரிகின்றன. நாய் நன்றியுள்ள மிருகமே எனினும் பழக்கமற்றவர் மீது பாய்ந்து கடித்து விடுமல்லவா? படியேறத் தயங்கி நின்றோம். காவலாளர்கள் நாய்களைச் சாந்தப்படுத்தி எங்களை மேலே அனுப்ப லாமாவின் அறையை அடைந்தோம்.

லாமா சிறுவயதினர். பெரும் பணக்காரர். எம்மை அன்புடன் அழைத்து ஆசனத்திலிருத்தி ஆர்வமொடு பேசினார். உப்புத் தேநீர்ப் பாத்திரமொன்று முன்னாலே இருந்தது. அழகிய மரக் கோப்பையிலே தேநீரை முடிவில்லாமல் வார்த்துக் கொண்டே பேசினார். அவருடன் சேர்ந்து நாமும் குடித்துக்கொண்டே பேசினோம். இடையிடையே ஆட்டுத் தயிரும் சர்க்கரையும் வந்துகொண்டிருந்தன, அன்பு உள்ளத்தை நிரப்ப, பேச்சு செவிகளை நிரப்ப ஆட்டுத் தயிர் வயிற்றை நிரப்பியது. சிறிது நேரம் செல்லக் கீழே சென்று ஆலயத்தைத் தரிசித்தோம்.

## ஆலயம்

முன் கண்ட குர்கியாம்கும்பாவை விட இவ்வாலயம் மிக அழகாகவும், ஆடம்பரமாகவும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. புனிதத் தெய்வீகம் குடிகொண்டிருந்தது. லாமாவின் அனுமதியோடு படம் பிடித்துக்கொண்டு பின்பும் மேலறைக்கு வந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தோம். கும்பாவின் மேற்பலகணி வழியே நோக்கினோம். எதிரே எல்லையற்ற பெருவெளி தோன்றியது. வெளியின் எல்லையில் இராட்சத தடாகமும், மானச சரோருவரமும், இறுதிச் சுவராக மந்தாதா மலைகளும் காட்சி அளிக்கின்றன. இயற்கை வெளியை நோக்கி இன்பத்தை ரசித்தவாறே லாமாவுடன் அளவளாவினோம். அதிகம் பேசுதற்குப் பாஷை இடையூறாக இருந்தது எனினும் உள்ளம் அறிந்து பழகிக்கொண்டோம். அன்புள்ளம் படைத்தவர்கள் பழகுதற்குப் பாஷை பெருந்தடையாகாதன்றோ.

## பிரிவு

மூன்று மணிக்கு அவ்விடத்தை அடைந்த நாங்கள் ஐந்து மணிக்குத்தான் விடைபெற்றுக்கொண்டோம். கைலாச தூபத்தையும், பாலிற் செய்யப்பட்டு நைவேத்தியமாய் வைக்கப்பட்ட ஒருவித பிரசாதத்தை



மனதைத் திடப்படுத்திக்கொண்டு 'ஜில்' லென்ற பனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1959 மே மாதம் 17-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

# விருந்தினர் தந்த மருந்து

ஹோரணையிலுள்ள சிறீபாலி ஸ்தாபனத்தின் வெள்ளி விழாவில் கலந்துகொள்வதற்காக இலங்கை அரசாங்கத்தின் விருந்தினராக வருந்தி வரவழைக்கப்பட்டவர் பேராசிரியர் ஹுமாயூன் கபீர்.

விருந்தினராக வந்த பேராசிரியர் கபீர் இங்கு வெளியிட்ட மணியான கருத்துக்கள் சில, அவரை வரவழைத்த அரசாங்கத்துக்குக் கசப்பான மருந்துபோல் அமைந்துவிட்டன. அதனால், பலர், முகம் சுண்டிப்போனார்கள் என்று தெரிய வருகிறது.

பேராசிரியர் கபீர் பாரத மத்திய அரசாங்கத்தின் கலாச்சாரத்துறை, விஞ்ஞான விவகாரத்துறை ஆகிய இரண்டுக்கும் அமைச்சராக விளங்குபவர். ஆங்கிலத்திலும் தாய்மொழியான வங்காளத்திலும் பெரும் விற்பன்னர். இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பொருளாதார சாஸ்திரம் பயின்று பட்டம் பெற்றவர். கலை, கலாச்சாரத்துறைகளில் ஆராய்ச்சிமிக்கவர். வங்காள மொழியில் வாரா வாரம் வெளியாகும் 'சட்டுராங்' என்ற கலாச்சார சஞ்சிகையின் ஆசிரியராக கடந்த பதினெட்டு வருட காலம் கடமையாற்றி வருபவர்.

இப்படியான ஒரு பிரபலஸ்தரை, பிரமுகரை வரவழைத்து, இலங்கைப் பிரதமரின் உத்தியோக வாசஸ்தலமான ரெம்பிள் ட்ரீஸில் அதிதியாக அமர்த்தி உபசரித்தபோது அரசாங்கம் எதிர்பார்த்தது என்ன?

இந்தியாவின் விஞ்ஞான விவகாரத்துறை அமைச்சராகையால் இந்தியாவின் விஞ்ஞான முன்னேற்றத்தைப்பற்றிப் பேசுவார்; கலாச்சாரத்துறை அமைச்சராகையால், அதுவும் வட இந்தியராகையால், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயுள்ள பௌத்த கலாச்சாரத் தொடர்புகளைப்பற்றி அள்ளி விளாசுவார் என்றுதானே அரசாங்கம் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும்?

ஆனல் நடந்தது வேறு: அவர் அரசியல் பேசிவிட்டார்! அதுவும் இந்த நாட்டில் உள்ள மிகப் பிரதானமான அரசியல் சிக்கலுக்கு மாற்று மருந்து என்ன என்பதை ஐயந்திரிபுகளுக்கு இடமின்றி, வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக, வெளிப்படையாக வெளியிட்டுவிட்டார். மருந்து மகத்தானது, ஆயினும் அரசாங்கத்துக்கு அது கசப்பானது. அருவருப்பானது!

பேராசிரியர் கபீர் இலங்கை உலக விவகார சபையின் ஆதரவில் பேசியபொழுதும், ரெம்பிள் ட்ரீஸில் பத்திரிகை நிருபர்களின் மாநாடு ஒன்றை நடத்தியபொழுதும், மற்ற இடங்களில் சொற்பொழிவாற்றியபொழுதும் வெளியிட்ட கருத்துக்கள் ஒன்றையொன்று தழுவியனவாகவே இருந்தன.

1. ஒரு நாட்டிலுள்ள சிற்றின மக்கள் சீரும் சிறப்பும் பெற்றுத் தன்மானத்துடனும் சுயகௌரவத்துடனும் வாழச் சமஷ்டி ஆட்சி முறை ஒன்றுதான் வழி செய்கிறது.

2. உலகமானது சரியான திசையில் முன்னேற்றமடைந்து உலக கலாச்சாரத்தை வளர்க்க வேண்டுமானல் முதலில் பல்வேறு சமூகங்களுடைய, பல்வேறு இனங்களுடைய உணர்ச்சிகளையும், கலாச்சாரங்களையும், பாரம்பரியங்களையும், மொழிகளையும், மதித்து அவற்றிற்கு சர்வசுதந்திரம் வழங்க வேண்டும்.

3. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் உண்மையான ஜனநாயகம். அது சமஷ்டித் தத்துவத்தின்மூலமே சாத்தியமாகும்.

4. வேறுபட்டவற்றின் தனித்தன்மைகளை அழிக்காது அவற்றை ஒற்றுமைப்படுத்தி ஐக்கியம் காண்பதே இயற்கையின் நியதியல்லாது எல்லாவற்றையும் ஒன்றாக்கி ஒருமைப்படுத்தும் செயல் இயற்கைக்கு முரணானதாகும். எனவேதான் தனி மலர்ச் செண்டைவிட, பலரக மலர்களைக்கொண்ட செண்டு அழகும் வனப்பும் வாய்ந்தது என்று பாடினார் கவிஞர் தாகூர்.

5. வேறுபட்ட ஏழு ஸ்வரங்கள் தத்தம் தனித்தன்மையை இழக்காது ஒன்று சேர்ந்துதான் நல்லிசையைப் பிறப்பிக்கின்றன. ஏழும் தனித்தன்மை அழிந்து ஒரு ஸ்வரமானல் கர்ணகடூரமான வல்லிசைதான் பிறக்கும்.

6. ஒரு நாட்டில் வாழும் மக்கள் நீதியைப் பெறவோ அல்லது சமத்துவமாக வாழவோ வேண்டுமானல் அங்கு சமஷ்டி ஆட்சி முறை ஒன்றுதான் இருக்க வேண்டும்.

7. சமஷ்டி ஆட்சி முறைக்கு ஒரு நாட்டின் பருமனோ, அளவோ, விஸ்தீரணமோ, பொருள் வளமோ முக்கியமல்ல. அங்கு வாழும் பல்வேறு இன மக்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும் என்பதே முக்கிய குறிக்கோள்.

8. உலகத்தில் விழுமிய அரசாங்கங்கள் எல்லாம் இன்று சமஷ்டி ஆட்சிபோன்ற அமைப்பைக்கொண்டதாகவேயிருக்கின்றன. இங்கிலாந்தில்கூட சமஷ்டி ஆட்சி முறை இருந்து வருவதைக் காணலாம். இங்கிலாந்திலுள்ள யார்க்ஷயர், வார்விக்ஷயர்போன்ற மாவட்டங்கள் சுயஆட்சி அங்கங்களைக்கொண்டனவாயுள்ளன. ஒவ்வொன்றும் தனித்தனியான பொலீஸ் படையைக்கூட வைத்திருக்கின்றன.

9. இங்கிலாந்திலுள்ள பல்வேறு பிரிவு மக்களும் தத்தம் தனித்துவத்தைப் பாதுகாத்து வருகின்றனர். தனித்தனியான பாரம்பரியப் பெருமைகளையும், கலை கலாச்சாரப் பழக்கவழக்கங்களையும் காப்பாற்றி வருகின்றனர். ஒரு ஆங்கிலேயனுடன் பேசும்போது அவன் ஒக்ஸ்போர்ட்ஷயர், லங்காஷயர், யோர்க்ஷயர், பேர்க்ஷயர், வார்விக்ஷயர் இவற்றில் எந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்பதை அவனுடைய நடை உடை பாவனை, பேச்சு முதலியவற்றின்மூலம் நிர்ணயிக்கக்கூடியதாக இருக்கிறது.

10. ஒரு நாட்டிலுள்ள சிறுபான்மை பெரும்பான்மை நோய்களையும் இன மொழி ரோகங்களையும் எதுவித சிக்கலுமின்றித் தீர்த்து, தேசிய ஒற்றுமை என்ற தேசத்தின் திட ஆரோக்கியத்தைப் பெறுவதற்கு ஏற்ற மாமருந்து சமஷ்டி அரசமைப்பாகும்.

மேற்கண்டவாறு பேராசிரியர் கபீர் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவர் கூற்று இலங்கைக்கும் பொருந்துவதாகும்.

இலங்கையின் இன மொழிப் பிரச்னைகளைத் தீர்க்க ஏற்ற வழி சமஷ்டி ஆட்சிதான் என்று கடந்த வருடம் இந்தியாவின் பழுத்த ஆத்மீக ஞானியும் சிரேஷ்ட அரசியல் தலைவருமான ராஜாஜி கூறினார். அவர் ஒரு தென் இந்தியர், தமிழர், அனுதாபத்தால் கூறினார் என்று சொல்லிவிடலாம்.

இதோ, ஒரு வட இந்தியர். மதத்தால் இஸ்லாமியர். மொழியால் வங்காளி. படிப்பால் பல்கலைக் கழகப் பொருளாதாரப் பட்டதாரி. ஞானத்தால் கவிஞர், பத்திராதிபர். பதவியால் பாரதப் பேரரசின் பொறுப்புவாய்ந்த அமைச்சர் கூறுகின்றார்: சமஷ்டி ஆட்சியே சிறந்ததென்று.

இப்போது என்ன கூறப்போகிறார்கள் அரசாங்கத்தினர், சமசமாஜிஸ்டுகள், கொம்யூனிஸ்டுகள், தமிழ் சமஷ்டி விரோதிகள்?

[illegible] நேர்மைத் திறமிருந்தால் பதில் கூறுங்கள், மாற்று மருந்து தாருங்கள் பார்க்கலாம் என்று கேட்கிறோம்.

# குருநாகல்லில் கூடும் சுதந்திரக் கட்சி மாநாடு

# எப்படி முடியுமோ என்று

## ஆதரவாளர்களிடையே கவலை

## கொந்தளிப்புகளும் தொடர்ந்து பல ராஜினமாக்களும் சம்பவிக்கலாம்

(சுதந்திரன் நிருபர்)

சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் குருநாகல்லில் நடைபெறவிருக்கும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாடு எப்படி முடியுமோ என்று கட்சியின் ஆதரவாளர்களிடையே கவலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. விஷமிகள் மாநாட்டில் சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுவதே கவலைக்கு காரணமாகும்.

நிலைமை சுமுகமாக இல்லாமையினல் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிகிறது. பிரதிநிதிகள் மட்டும் மிகுந்த கட்டுப்பாட்டோடுதான் மாநாட்டு மண்டபத்துள் அனுமதிக்கப் படுவார்களாம்.

சாதாரண உடைதரித்த சி. ஐ. டி பொலீஸ்காரர்களைக் கொண்டு வெளிப்புறத்தில் ரோந்து பார்க்குமாறு பிரதமர் பொலீஸ் தலைவரைக் கேட்டுள்ளார் என்ற செய்தியை ஊர்ஜிதம் செய்ய பொலீஸ் வட்டாரங்கள் மறுத்து விட்டன.

### பிலிப்பின் திட்டம்

உணவு அமைச்சர் திரு பிலிப் குணவர்த்தனவின் கையாட்கள் பிரதிநிதிகள் என்ற போர்வையில் உட்புகுந்து மாநாடு குழப்பத்திலும் கூச்சலிலும் முடியுமாறு செய்துவிடத் திட்டம் வகுத்துள்ளார்கள் என்ற வதந்தி சுதந்திரக் கட்சித் தலைவர்களை ஒரு கலக்குக் கலக்கியிருப்பதாகத் தெரிகிறது. இப்படியொரு காரியத்துக்குப் பூர்வாங்கமாகத்தான் திரு பிலிப் சுகவீனப் படுக்கையில் "படுத்துள்ளார்" என்று ஒரு சுதந்திரக் கட்சிப் பிரமுகர் காதோடு காதாகக் கூறியதைச் சுதந்திரன் ஒற்று நிருபர் கிரகித்துக்கொண்டார்.

எப்படியும் கட்சிக்குள்ளேயே அபிப்பிராயபேதங்களும் குழப்பங்களும் ஏற்பட்டு, உடனடியாக அல்லாவிட்டாலும் அதைத் தொடர்ந்து முக்கிய தலைவர்களும் தொண்டர்களும் காலப்போக்கில் கட்சியை விட்டு ராஜினமாச் செய்யும் சூழ்நிலை உருவாகும் என்று திடமாக எதிர்பார்க்கப்படுகிறது.

### தொழிற் சங்க இயக்கம்

தொழிற் சங்க இயக்கம்பற்றி திரு சோ. வன்னியசிங்கம் B. Com., M. Sc. (Econ) (Lond) எழுதும் கட்டுரை அடுத்த வாரத்திலிருந்து தொடர்ச்சியாக வெளியிடப்படும்.

## தமிழன் சிந்திய இரத்தம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்றும் திட்டங்கள் திட்டப்பட்டுள்ளன.

### தமிழ்க்கொடி

அத்தோடு, மேற்படி கலவரத்தின் போது வகுப்புவெறியர்களைப் புறமுதுகிட்டு ஓடும்படியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து அம்முறை ஆரம்பித்த வகுப்புக் கலவரத்துக்கு இலங்கை முழுமையும் முற்றுப் புள்ளி வைத்த துறைநிலாவணை மக்களின் வீரத்தை நினைவு கூறும் முகமாக வெறியர்கள் துரத்தப்பட்ட இடத்தில் கொங்கிறீட் கட்டடத்தின் மீது ஒரு துவஜ ஸ்தம்பம் நிறுத்தி அதில் தமிழ்க் கொடி பறக்க விடுவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### ஆங்காங்கே ஞாபகார்த்தம்

இந்தப் பத்து நாட்காலத்தில் திருமலை நடராஜன் ஞாபகார்த்தத்தை திருமலை மக்கள் செய்வார்கள் என்றும், தனுஷ்கோடியின் ஞாபகார்த்தத்தை மன்னர் மக்கள் செய்வார்கள் என்றும் அப்பாவு-அந்தோனி ஆகியோரின் ஞாபகார்த்தத்தை பொகவந்தளாவை மக்கள் செய்வார்கள் என்றும் உடைமைகளையும் உயிர்களையும் இழந்த அகதிகளாக கப்பலேறி யாழ்ப்பாணம்வந்தடைந்த தமிழ் மக்களின் கஷ்ட நஷ்ட ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணத்து மக்கள் ஏற்ற ஞாபகார்த்தக் கூட்டங்களை நடத்துவார்கள் என்றும் தாம் எதிர்பார்ப்பதாக திரு. செ. இராசதுரை கூறி முடித்தார்.

## புதை பொருள்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடத்தில் நாட்டம் எதுவுமில்லை. பூர்வீக அழிபாடுகள் காணப்படுகின்ற சுமார் 25 ஏக்கர் பிரதேசம் புதைபொருள் அகழ்வாராய்ச்சிக்காக ஒதுக்கிப்பாதுகாக்கப்படவேண்டும்.

இந்த இடத்தை அத்துமீறி ஆக்கிரமித்துக்கொண்டிருப்பவர்களைவெளியேற்றுமல் அங்கு பரீட்சார்த்தமாகவேனும் தோண்டிப் பார்த்தல் புத்தியான காரியமாகாது. அவர்கள் எவ்வளவுதான் உறுதியளித்தபோதிலும்அங்கு ஆராய்ச்சி ஆரம்பித்தால் இந்துக்கள் பகை பாராட்டிச் சீறியெழுவார்கள் என்பது திண்ணம்.

இங்கு விவரிக்கப்பட்டது போன்ற ஒரு பிரதேசத்தில் பரிபூரணமான ஆராய்ச்சி நடத்தாமல் அந்த இடத்தைச் சமய சம்பந்தமான பொதுக்காரியத்துக்கு ஒருபோதும் பராதீனப்படுத்தக் கூடாது. அந்த இடம் தங்களுக்கே சொந்தமானது என்று உரிமை கொண்டாடும் ஆக்கிரமிப்பாளர்கள் அங்கு குந்திக் கொண்டிருக்க அனுமதிக்கப் படும்வரை ஆராய்ச்சி சாத்தியப்படாது.

ஒரு பூர்வீகப் பெருமை வாய்ந்த பௌத்த ஸ்தலமாக இந்த இடம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற கருத்துடைய ஒரு பௌத்த கோஷ்டியும் இருக்கிறது. இப்போது இருந்துவரும் நிலையில், ஆக்கிரமிப்பாளர்களை உடனடியாக வெளியேற்றும்படி மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க ஏஜண்டுக்கு கட்டளையிடுவதே சரியான காரியமாகும்.

ஒப்பம்: ஸி. ஈ. கொடகும்புற

தற்காலிக புதைபொருள் ஆராய்ச்சிக்கமிஷனருக்காக.

கொழும்பு 7
ஏப்ரல் 4, 1959.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனரின்

## அந்தரங்க அறிக்கை

## பெரிய கதிர்காமம் என்னும் சாந்த மலையை பௌத்த மயமாக்க அரசாங்கத்தின் இரகசிய திட்டம்

## இந்துத் தமிழர்கள் ஸ்தலத்தைச் சமீப காலத்தில் ஆக்கிரமித்துக் கொண்டார்களாம்

மட்டக்களப்பு மக்கள் பெரிய கதிர்காமம் என்று கொண்டாடி வரும் சாந்தமலை என்னும் ஸ்தலத்தை இந்துக்களான தமிழர்களிடமிருந்து அபகரித்து அதையொரு பௌத்த ஸ்தலமாகப் பிரகடனப்படுத்திவிட புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனரும், அரசாங்கமும் அந்தரங்கத் திட்டம் வகுத்துச் செயலாற்றி வருவதாகக் கடந்த வாரம் செய்தி பிரசுரித்தோம்.

இத்தொடர்பில் 18-3-1959ல் மட்டக்களப்புக் கச்சேரியில் நடைபெற்ற ஒரு மாநாட்டின் குறிப்பும், அரசாங்க ஏஜண்ட் எழுதிய கடிதமும், புதைபொருள் ஆராய்ச்சி உதவிக் கமிஷனர் திரு ஸி. ஈ. கொடகும்புற அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த அந்தரங்க அறிக்கையும் இங்கு பிரசுரமாகின்றன. இரகசியமான இந்த அறிக்கையைத் தமிழ் மக்களுக்கு அம்பலப்படுத்தி உண்மை நிலையை விளக்குவதில் சுதந்திரன் பெருமையடைகிறது.

கச்சேரியில் நடைபெற்ற மாநாட்டில் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையும், தேசிகமணி கா. அருணாசல தேசிகரும் பங்குபற்றியதாக ஒரு பத்திரிகையின் மட்டக்களப்பு விசேஷ நிருபர் குறிப்பிட்டிருந்தார் ஆனால் நாம் வெளியிடும் உத்தியோகபூர்வமான மாநாட்டுக் குறிப்பில் அவர்கள் பெயர்கள் காணப்படவில்லை யென்பதை நேயர்கள் கவனிக்க வேண்டும்.

திரு கொடகும்புறயின் அறிக்கையில் முன்னுக்குப் பின் முரணும், அசம்பாவிதமான வாக்கியப் பிரயோகங்களும் காணப்படுகின்றன. இந்துத் தமிழர்மீது துவேஷமும் பௌத்தர்கள்மீது வாஞ்சையும் அந்த அறிக்கையில் இழையோடியிருப்பதை வாசகர்கள் அவதானிப்பார்கள் என்று நம்புகிறோம்.

L. E. 8119

**18-3-1959 பிற்பகல் 5.30 மணிக்கு மட்டக்களப்புக் கச்சேரியில் நடைபெற்ற தாந்தாமலை வணங்குவோரின் மாநாட்டு நிகழ்ச்சிக் குறிப்புகள்.**

சமுகமாயிருந்தவர்கள்: 1. டபிள்யு. பத்திராஜ அரசாங்க ஏஜண்ட், மட்டக்களப்பு மாவட்டம் (மாநாட்டுத் தலைவர்) 2. எஸ். யு. எதிர்மன்னசிங்கம், எம். பி. பட்டிருப்பு. 3. ஆர். சிதம்பரப்பிள்ளை, டி. ஆர். ஓ. மண்முனை தெற்கு எருவில் போரதீவு. 4. எஸ். எம். இராசமாணிக்கம் தலைவர் களுவாஞ்சிக்குடி கிராமச்சங்கம், 5. கே. என். குமாரசாமி, புரக்டர். 6. கே. வி. எம். சுப்பிரமணியம், புரக்டர். 7. எஸ். பூபாலபிள்ளை, பண்டிதர். 8. டி. கிருஷ்ணபிள்ளை, பண்டிதர். 9. ஏ. புவனேசசிங்கம், தலைவர் கொக்கட்டிச்சோலை கிராமச் சங்கம். 10. பி. கதிராமப்போடி, வண்ணக்கு. 11. கே. மாமாங்கம்பிள்ளை, 12. கே. இரத்தினம், 13. கே. முருகுப்பிள்ளை, 14. கே. சோமசுந்தரம், கே. எம். 15. வி. கதிர்காமதாசன் எல். எப். மற்றும் சிலர்.

அங்கு குழுமியிருந்தவர்கள் குறுகிய கால முன்னறிவித்தலின் பேரில் சமுகமளித்தமைக்காக அரசாங்க ஏஜண்ட் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார். மாநாடு கூட்டப்பட்டதன் நோக்கத்தைச் சாங்கோபாங்கமாக விளக்கினார். 12-3-59-ல் ஸ்தலத்துக்கு விஜயம்செய்த புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனர், தாந்தாமலை புதைபொருள் ஆராய்ச்சி நாட்டத்துக்குரிய ஒரு இடமென்றும், அது புதைபொருள் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்பட வேண்டுமா இல்லையா என்பதை நிலத்தைத் தோண்டிப் பார்த்த பின்புதான் சொல்ல முடியும் என்றும், அதற்கு அங்கு வணங்குவோரின் ஒத்துழைப்புத் தேவைப்படுகிறதென்றும் அபிப்பிராயப் பட்டார் என்பதாக அரசாங்க ஏஜண்ட் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், அந்த இடத்திலே அகழ் ஆராய்ச்சி சம்பந்தமான எதுவிதப் பொருட்களும் கண்டு பிடிக்கப்படாவிட்டால், புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனருக்கு அவ்விடத்தில் எதுவித அக்கறையும் இருக்காதென்றும், அதன் பின்னர் அந்த இடத்தை அரசாங்கத்திடமிருந்து குத்தகைக்கு கேட்டு வாங்குவோருக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கலாம் என்றும் கூறினார்.

நீண்ட நேரம் விவாதம் நடைபெற்றது. வணக்கத்துக்குரிய ஒரு ஸ்தலத்தை அகழ்ந்து சின்னாபின்னப் படுத்துவது அதன் பரிசுத்தத் தன்மையைப் பங்கப் படுத்துவதாகும் என்றும் எவ்வளவுதான் ஒத்துழைக்க விரும்பினாலும், இந்துக்கள் என்ற முறையில் தாங்கள் அந்தக் காரியத்துக்கு ஒப்புதல் தர முடியாது என்றும் அங்கு குழுமியிருந்தோர் கூறினர். ஸ்தலத்தில் தாங்கள் எதுவித குழப்பமும் செய்யப்போவதில்லை யென்றும் அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் கருத்துக்களைத் தாம் புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனருக்குத் தெரியப்படுத்துவதாக அரசாங்க ஏஜண்ட் தெரிவித்தார்.

ஒப்பம்: டபிள்யு. பத்திராஜ
ஜி. ஏ. மட்டக்களப்பு
மாவட்டம்.

ஒப்பம்: தெளிவில்லை.
எல். ஸிக்காக
கச்சேரி, மட்டக்களப்பு
18-3-59.

My No. L F. 8119
Yr. No.EC B 709(7)of 6-3-59
புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனருக்கு.

**சாந்தகல அல்லது ரஹூத்தகல (தாந்தாமலை)**

என்னுடைய இதே இலக்கமிட்ட 3-3-59 கடிதத்தையும் உங்கள் பரிசோதனையையும் தொடர்ந்து கச்சேரியில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது; மாநாட்டுக் குறிப்பு இத்துடன் அனுப்பப்படுகிறது.

2. இது சம்பந்தமாக, வணங்குவோரின் உணர்ச்சி எவ்வாறிருந்ததென்பதை உங்கள் விஜயத்தின்போது நீங்களே அவதானித்திருப்பீர்கள் என்று நான் எண்ணுகிறேன்.

3. இந்தப் பிரச்னை சம்பந்தமாக என்ன நடவடிக்கை மேற்கொள்ள நீங்கள் உத்தேசித்துள்ளீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

ஒப்பம்: டபிள்யு. பத்திராஜ
ஜி. ஏ. மட்டக்களப்பு
மாவட்டம்

ஒப்பம்: விளக்கமில்லை
எல். ஸிக்காக
மட்டக்களப்பு,
24-3-59.

எருவில் போரதீவுப் பற்று டி. ஆர். ஓவின் No: MS B 444 10-3-59க் கடிதம் விவரந் தெரிந்து கொள்வதற்காக இணைக்கப்பட்டுள்ளது.

My No: EC /B/ 709 (7)

**ரஹூத்கல**

இந்த இடம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுவாஞ்சிக்குடி டி. ஆர். ஓ. வின் எல்லையுள் இருக்கிறது (அங்குலத்துக்கு ஒரு மைல் வீதம் உள்ள தேசப்படத்தாள்: இல: 107/ KI/ 54, 55). இதன் தமிழ்ப் பெயர் சாந்தமலை என்பதாகும். தாந்தாமலையென்பது திரிபடைந்த பெயராகும்.

இந்த ஸ்தலத்தை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க ஏஜண்ட் திரு. டபிள்யு. பத்திராஜவுடன் நான் 12-3-59ல் பரிசீலனை செய்தேன். சமீபகாலமாக இந்த இடத்தில் வணக்கம் செலுத்துவோருடைய பிரதிநிதிகளோடு அரசாங்க ஏஜண்ட் ஒரு மாநாடும் நடத்தியுள்ளார்.

இது ஒரு பூர்வீக பௌத்த ஸ்தலம் என்பது சர்வ நிச்சயமாகும். அங்கு ஒரு [illegible] கோபுரம் [illegible] இருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன கட்டடங்கள் பலவற்றின் சிலமான பாகங்கள் காணப்படுவதோடு ஒரு கர்ப்பக்கிரகத்தின் அழிபாடுகளும் உள்ளன. அங்கு வேறு ஆதாரங்களும் ஒரு செயற்கைக் குளமும் காணப்படுகின்றன. இவை சாதாரணமாக ஒரு பௌத்த மடத்துக்கு அருகாமையில் வழக்கப்படி காணப்படுவனவாம்.

பூர்வீக கட்டடங்களின் அடித்தளங்களின் மீது இந்துக்கள் ஒரு தற்காலிக கட்டடத்தை எழுப்பியுள்ளார்கள். பழைய குளத்தின் ஒரு மூலையில் ஒரு கிணறு தோண்டப்பட்டு சுண்ணத்தினாலும் சிமெந்தினாலும் கட்டப்பட்டிருக்கிறது.

சமீப காலமாகத்தான் இந்துக்கள் இவ்விடத்தை ஆக்கிரமித்துள்ளார்கள் என்று தெரியவருகிறது. கடந்த வருடம் நடைபெற்ற வகுப்புக் கலவரங்களின் பின்னர் கதிர்காமத்துக்குப் போக அஞ்சிய இவர்கள் இந்த தற்காலிக ஆலயத்தை அமைத்தனர். அப்படியிருந்தும் இந்துக்களான தமிழர்கள் இந்த இடம் தங்களுக்கு சொந்தமானதென உரிமை கோருகிறார்கள். கொக்கட்டிச்சோலையிலுள்ள சிவன் கோவிலைக் கட்டுவதற்கு அவர்கள் கற்களை இந்த இடத்திலிருந்தே எடுத்துச் சென்றார்கள் என்பதும், வருடா வருடம் கொக்கட்டிச்சோலை ஆலயத்துக்கான கொடி ஸ்தம்பத்தை தாந்தாமலையிலிருந்தே எடுத்துச் செல்கிறார்கள் என்பதுமே அவர்கள் உரிமை கோருவதற்குகாட்டும் ஆதாரங்களாகும்.

அருகாமையிலுள்ள கற்பாரின் மீது பூர்வீக ஆலயம் ஏதாவது இருந்திருக்கலாம், ஆனால் இப்போது குறிப்பிடக்கூடிய ஆதாரங்கள் எதுவும் தென்படவில்லை. இந்தக் கற்குன்றின் உச்சியில் மகேசனுடைய ஆலயம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. பீடபூமியின் நேர் கீழே, இப்பிரதேசத்தில் நாட்டமுடைய இந்துக்கள் கூட்டம் கூடுவதற்காக ஒரு கொட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கற்பாரின் மீது எதுவித பூர்வீக அழிபாடுகளும் தற்போது காணப்படாமையால், புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவுக்கு

(8-ம் பக்கம் பார்க்க)

**தடுப்புக் காவலில் மூன்று மாதங்கள்**

தவிர்க்க முடியாது வெளியூர்களுக்கு பிரயாணம் செய்ய வேண்டி ஏற்பட்டதனால் மேற்படி தொடர் கட்டுரையை இவ்வாரம் எழுத முடியாது போயிற்று என்று திரு செ. இராசதுரை எம். பி. அறிவித்துள்ளார்.

அடுத்த வாரம் கட்டுரை வழக்கம்போல் வெளிவரும்.


எழுத்தாளர்களாக விரும்புகிறீர்களா?

இம்மாதம் கலைச் செல்வி 'வளரும் எழுத்தாளர்' மலராக வெளிவந்துள்ளது. ஈழத்திலுள்ள பல 'வளரும் எழுத்தாளர்'களின் படைப்புகள், அவர்களின் புகைப் படங்களுடன் இடம்பெற்றுள்ளது

எங்கும் கிடைக்கும்.

கலைச் செல்வி
கந்தரோடை, சுன்னாகம்.

G. C. E. ஓகஸ்ட்/டிசம்பர்

★ தமிழ் ஜி. ஸி. ஈ. பரீட்சையில் சித்தியடைவது சுலபமாகிவிட்டது.

★ ஓகஸ்ட்-டிசம்பர் பரீட்சைகளுக்கு அற்லஸ் ஹோல் அளிக்கும் புதுப் பாடங்கள் தயாராய்விட்டன.

★ எல்லாப் பாடங்களுக்கும் கடந்தகால பரீட்சைகளின் வினு விடைகள் உண்டு.

★ அத்தோடு மாதிரி வினு விடைகளும் தனியாக உண்டு.


★ தனித்தனிப் பாடத்துக்கு விலை ரூபா 3-00 தபால் செலவு சதம் 35.

★ [illegible]யபாடத்திட்டம், பரீட்சை விதிகள் என்னும் [illegible]ங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

அற்லஸ் ஹோல்

தபால் பெட்டி: 649. போன்: 9759.

723, மருதானை ரோட், கொழும்பு.



சி. சி. சி.

தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன,

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக.

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.)

தபாற் பெட்டி 33, கொழும்பு. ccc625


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கீழ்சாதிப் புராணம்!

புராண நடைச் சிறுகதை — எழுதியவர்: உதயணன்

## சமர்ப்பணம்

சாதிப் பாகுபாட்டை ஒழிக்கப் பாடுபடும் கட்சிக்காரருக்கும், இக் கொள்கையின் எதிர்க்கட்சியாருக்கும், ஒரு பக்கம் வாலும் மறு பக்கம் தலையும் காட்டும் விலாங்குக் கட்சியாருக்கும், மற்றும் சுயேச்சையாளருக்கும் இது சமர்ப்பணம்.

## சிறப்புப் பாயிரம்

இன்றைக்கு வாசக நண்பர்களுக்கு கிழ்சாதிப் புராணத்தைக் கூறத் திருவருள் பாலித்திருக்கிறது. இப் புராண காதையில் சம்பந்தப்பட்ட ஐவரும் இறந்துவிட்டனர். பின்னர் என்ன புராணம் என்று நீங்கள் வியப்படையலாம். அதில்தான் விஷயம் இருக்கிறது. இறந்தவர்களின் கதையைச் சொல்லுவதில்தான் பெருமையும் இருக்கிறது. இதில் ஏதாவது சிறப்புகள் இருப்பதாகக் கண்டால் நான் செத்த பிறகு என்னைப் பாராட்டுங்கள். குறைபாடுகள் இருப்பதாகக் கண்டால் இதைப் படிக்க நேர்ந்தமைக்கு உங்கள் தலைவிதியை நொந்துகொள்ளுங்கள்.

## முதலாம் பாகம்

யாராவது ஒருவர் உண்மையாக கைலாசத்துக்குப் போய்விட்டுத் திரும்பி வந்து பூவுலகில் வாழ நேர்ந்தால் அவருக்கு என்ன மதிப்பிருக்குமோ தெரியாது. ஆனால் திருவாளர் கைலாசத்துக்கு அந்த ஊரில் பெரு மதிப்பு இருந்தது.

அதாகப்பட்டது, அந்த ஊரில் எங்காவது கல்யாணமா? அங்கே கைலாசம் இருப்பார். எங்காவது திருவிழாவா? அங்கேயும் கைலாசம் இருப்பார். கூட்டமா, கொண்டாட்டமா, விருந்துபசாரமா எதுவானாலும் அந்த ஊர் மக்களுக்கு கைலாசம் தான் கைலாசம். இத்தனைக்கும் காரணம் என்ன தெரியுமோ? அவரைத் தாராளமாகக் கட்டிப் புரண்டாள் அந்தப் பரத்தை-பணமாது! பணத்தை பரத்தை என்று மட்டும் சொன்னால் போதாது. இன்னும் ஏதாவது 'காரசார'மாகச் சொல்ல வேண்டும். பணத்தைத் தொட்டுக் கன்னத்தில் போட்டுக்கொள்வோருக்காக இந்தளவில் விட்டுவிடலாம்.

கங்குல் நிறம், கைப்பிடியளவு கேசம், கனத்து நீண்ட நாசி, கரகரப்பான கன்னம், கரிய உதடுகள், கண்டோரை மலைக்க வைக்கும் முகவிகாரம்.........ஐயகோ! யாரை வர்ணித்தேன்? கைலாசத்தையா? இல்லை! அவருடைய திருக்குமாரத்தியை-அவளுக்குப் பெயர் வடிவு; ஆமாம் பெயர்தான். ஆனால் அவளே இன்னொருவனுக்கு வடிவாகப் பட்டாள். ஒருவேளை அந்தக் கட்டழகன் அவளை கைலாசத்தின் பணக் கண்ணாடியால் பார்த்தானுக்கும்-யாரந்தப் பாபாத்மா என்று கேட்கிறீர்களா? கொஞ்சம் இருங்கள்.

அன்று அந்தப் பிள்ளையார் கோவிலில் கைலாசத்தின் திருவிழா. கைலாசம் போகலாம் என்ற நம்பிக்கையில் தானு திரு கைலாசம் வருடா வருடம் பிள்ளையாரின் பெயரால் இத்தனை ஆயிரம் ரூபாவுக்கு வெளிச்சம் போடுகிறார் என்ற அசட்டுக் கேள்வியைத் தயவு செய்து கேட்க வேண்டாம்.

அன்றைய திருவிழாவில் முக்கியமான நிகழ்ச்சி சதிர்க் கச்சேரியாகும். சதிர்க்கச்சேரி முன்னதாகவே முடிந்துவிட்டால் பிள்ளையார் தனியாகத்தான் வீதி சுற்றிவர வேண்டிய 'எக்கச்சக்கம்' ஏற்படும் என்ற மக்களின் பக்தி விசுவாசத்தை நன்கு அறிந்தவர் கைலாசம். அதனால் மின்சார தீபாலங்காரச் சப்பரத்தில் ஏறிய பிள்ளையாரும் அவசர அவசரமாக வீதியைச் சுற்றிக்கொண்டு ஓடிவந்து வடகிழக்கு மூலையில் திரும்பி, எதிரே இருந்த மேடையைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

'வன்ஸ் மோர்' என்ற கூச்சல் வானைப் பிளக்குமுன் இரைந்து மடிந்தது. மின்சார விளக்குகளின் ஒளி ஜாலம், பிள்ளையார் கொட்டு கொட்டென்று விழிப்பது போல தூக்கிக் காட்டியது.

"........பைங்கிளி இதழில் பழரசம் தருவாள், பருகிடத் தலைகுனிவாள்......" என்ற சினிமாப்பாட்டு அடியைப் பாடிக்கொண்டே மேடையில் ஏறி நெளிந்தாள் ஓர் ஒய்யாரி. எல்லாருடைய உள்ளங்களும் சேர்ந்து நெளிந்தன. இவ்வளவையும் செய்துவிட்டு, நாளைக்கு தங்கள் பிள்ளைகள் கெட்டுப் போய்விட்டால் பெற்றோர் ஏன் ஒப்பாரி வைக்க வேண்டும் என்ற குட்டிச் சுவர் ஆராய்ச்சி நமக்கெதற்கு?

வெற்றிலையை மடித்து வாயில் திணித்துக்கொண்டு, தன்பாட்டுக்கு சப்பாணங் கொட்டி இருந்து தலையாட்டினார் திருவாளர் கைலாசம். அவருக்குச் சிரமம் தர விரும்பாது மடியில் விழுந்து தன்பாட்டுக்குக் கிடந்தது அவருடைய சால் வயிறு. யாரோ ஒரு பள்ளிக்கூட மாணவன், மேடையருகில் இருந்து சதிர்க் கச்சேரியை அனுபவித்துக்கொண்டிருந்த அரைத் தாவணி மங்கைக்கு எறிந்த கடலைமணி கைலாசத்தின் நெற்றியில் 'பொட்' டென்று பட்டுத் தெறித்தது. திரும்பினார் கைலாசம். நாட்டியத்தை 'சப்பிச் சுவைத்து மென்று' கொண்டிருந்த அவருடைய வீட்டு வண்டிக்கார மாணிக்கம் தான் கண்ணில் பட்டான்.

"ஏண்டா மாணிக்கம்! உனக்கும் திருவிழா கேட்குதா? போடா வீட்டை" என்று அதட்டினார். மாணிக்கம் போய்விட்டான். தாழ்ந்த சாதிக்காரனுக்கு ஏன் திருவிழா என்று எண்ணினாரோ கைலாசம்?

திருவிழா முடியும்வரை காத்திருந்து பிரசாதம் வாங்கிக்கொண்டு வீடு திரும்பிய கைலாசம் திருவிழாச் செய்த பலனைக் கையோடு கண்டார். வீட்டில் அவருடைய அருமைப் புதல்வி வடிவைக் காணவில்லை. அன்றிலிருந்து வண்டிக் காரன் மாணிக்கத்தையும் காணவில்லை. விஷயம் 'சீரியஸ்' ஆகிவிட்டதை வாசகர்கள் விளங்கிக் கொள்ளலாமல்லவா?

கைலாசம் போன்ற நிலையில் உள்ள ஒருவர் இந்த நிகழ்ச்சியையிட்டு மூன்று காரியங்களைச் செய்திருக்கலாம். முதலாவது, பொலீஸில் புகார் செய்து மாணிக்கத்தைக் கைதுசெய்வதோடு வடிவையும் மீட்டிருக்கலாம். இரண்டாவது, தன் கையாட்களை ஏவி மாணிக்கத்தைத் தீர்த்துக் கட்டிவிட்டு வடிவை வீட்டுக்கு இழுத்து வந்திருக்கலாம். மூன்றாவது, மாணிக்கத்தையும் வடிவையும் ரகசியமாகத் தேடிப் பிடித்து கொஞ்சம் பணத்தைக் கொடுத்து, எங்காவது கண்ணுக்கெட்டாத தூரத்தில் போய் சுகமாக வாழுங்கள் என்று அனுப்பியிருக்கலாம். அவர் மூன்றையும் செய்யவில்லை. "வீட்டை விட்டுப் போன சனியன்—அதிலும் ஒரு கீழ் சாதிப் பயலோடு ஓடிப்போன கழுதை திரும்பிவரவே வேண்டாம்" என்று சொல்லிவிட்டு கல்லாக இருந்து சகல பாக்கியங்களையும் பெற்று சுகசீவனம் செய்து வந்தார்.

## இரண்டாம் பாகம்

இப்படியாகத்தானே மாணிக்கமும் வடிவும் தனிக் குடித்தனம் ஆரம்பித்து வாழ்ந்து வரும் காலத்தில் அவர்கள் பட்ட துயருக்கு அளவில்லை. மாணிக்கம் நாளாந்தம் மூட்டை சுமந்து ஒருநாளைக்கு ஒரு ரூபாய் பெற்றதால் வடிவு அரைப் பட்டினியும் மாணிக்கம் முழுப்பட்டினியுமாக 'சந்தோஷமாக' பட்டினி வாழ்க்கை நடாத்தி வரலானார்கள்.

இப்படிப் பட்டினி வாழ்க்கை நடாத்திவிட்டுச் செத்துப்போனால்தான் பரவாயில்லையே. பத்தாவது மாதம் வடிவு 'ஒரு குழந்தையைப் பெறப்போகிறேன்' என்றாள் பெருமையோடு. 'சரி பெற்றுவை' என்றான் மாணிக்கம்.

ஆஸ்பத்திரியில் [illegible] ளாகப் படுக்கையில் கிடந்து என்று தெரியாமல் கைலாசம் திண்டாடிய அதே வேளையில், அவருடைய மகள் வடிவின் உயிரைக் காக்க மருந்து வாங்கப் பணம் இல்லாமல் மாணிக்கம் திண்டாடினான். இரண்டும் திண்டாட்டம் தான்! செய்வதறியாது கலங்கி நின்ற மாணிக்கத்துக்கு உதவி செய்ய வடிவு ஓர் உபாயம் செய்தாள். கல்யாணி என்ற குழந்தையைப் பெற்றுக் கையில் கொடுத்துவிட்டு, கண்ணை மூடிக் கைலாச யாத்திரையை ஆரம்பித்தாள்.

## மூன்றாம் பாகம்

ஆழியால் சூழப்பெற்ற உலகின் கண்ணே, மனித வர்க்கத்தையும் தாவரங்களையும் சகல சீவராசிகளையும் படைத்து, காத்து அழித்துவரும் எல்லாம் வல்ல எம்பெருமான் திருவருளால் பதினெட்டு வருடங்கள் பறந்தோட, தாழ்ந்த சாதிக்காரன் மாணிக்கத்தின் புதல்வியும் உயர்ந்த சாதிக்காரன் கைலாசத்தின் பேத்தியுமான கல்யாணி பருவ வயதை எய்தினாள்.

உலகம் முன்னேறிவிட்டதால், பிச்சை எடுத்தாவது கல்யாணியைப் படிப்பித்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டினான் மாணிக்கம். அதற்குப் பொருத்தமாக மாணிக்கத்துக்கு தெல்லிப்பளை என்ற ஊரில் ஒரு நிரந்தரமான கூலிவேலை கிடைத்தது. ஆகவே, சரித்திர வாயிலாக யாழ்ப்பாணம் என்று அறியக்கிடக்கின்ற பெரிய பட்டணத்தில் ஒரு பாடசாலையில் கல்யாணி சேர்க்கப்பட்டாள்.

தினசரி காலை எட்டுமணி ரயிலில் புறப்பட்டுப் பாடசாலைக்குப் போய் மாலை ஐந்து மணி ரயிலில் திரும்பி வருவாள் கல்யாணி. வீட்டைவிட்டுக் கிளம்பிவிட்டால், மாணவச் சிங்கங்களும் மாணவச் சிங்கிகளும் சேர்ந்து பிரயாணம் செய்யும் ரயிலில் பலதும் பத்தும் நடக்கத்தான் செய்யும். அந்தக் கேவலத்தையெல்லாம் இங்கு எழுதி இப் புராணத்தை மாசுபடுத்தப் போவதில்லை.

கல்யாணி பிரயாணம் செய்யும் அதே ரயிலில் காலையும் மாலையும் ஒரு கறுப்புச் சட்டைக்காரனும் பிரயாணம் செய்தான். அவன் புகையிரதப் பகுதி 'கார்ட்' உத்தியோகத்தன். அவனுக்குக் கல்யாணியின் மேல் ஒரு கண். மற்றக்கண் எதன்மேல் என்று மட்டும் கேட்டு ஆக்கியோனைத் திணறடியாதீர்கள். இங்கே ஒரு சிறப்பு என்னவென்றால் அவனும் ஒரு தாழ்ந்த சாதிக்காரனே. அவனுடைய ஊர்ப்பெயர் செல்லன்; உத்தியோகப் பெயர் செல்லத்துரை.

செல்லனுடைய கருத்தை கல்யாணியும் ஆதரிக்கவே, இருவரும் ஒரு நாள் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். இதையறிந்த மாணிக்கம் செல்லனுடைய பூர்வோத்திரங்களை விசாரித்துவிட்டுச் சீறினான். மாணிக்கம் தாழ்ந்த சாதிக்காரன் தான்; செல்லன் அவனிலும் குறைந்த சாதிக்காரனாயிற்றே. "ஒரு கீழ் சாதிக்கு என் மகள் வாழ்க்கைப் படவா?" என்று சினந்த மாணிக்கம், தன்னுடைய கொண்டு போய் தன் தகப்பனர் பாளை சீவுவதுபோல செல்லனைச் சீவி எறிந்தான். பொலீசார் மாணிக்கத்தைப் பிடித்துத் தூக்கு மேடையில் ஏற்றி மரியாதையோடு செல்லன் சென்ற வழியே அனுப்பி வைத்தனர். இதைக் கேள்வியுற்ற கல்யாணி கிணற்றில் குதித்துக் கைலாசம் கண்ட கதை இங்கு அவசியமில்லை.

## முடிவுரை

கதாபாத்திரங்கள் ஐவரில் நான்கு பேர் 'கெட்டித்தனமாகச் சாகடிக்கப்பட்டுவிட்டார்கள். அவர்கள் செத்ததில் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஏனென்றால் அவர்களில் இருவர் தாழ்ந்த சாதிக்காரர்; இருவர் தாழ்ந்த சாதிக்காரருக்கு வாழ்க்கைப்பட்டவர்கள். எண்பது வயதை அடைந்து இன்னும் உயிரோடு இருக்கும் கைலாசம்? அவரையும் சாகடித்துவிடுவது பெரியகாரியமல்ல. ஆனால் அந்த மனிதன் உயர்ந்த சாதிக்காரனாயிற்றே; எல்லோரையும் போல காய்ச்சல் கறுப்பு வந்து-எல்லோரையும்போல அவருடைய பூதவுடலும் மயானத்தில் புதைக்கப் படுவதா? அந்தோ! அநியாயம்!! ஆதலால் அவருடைய இறுதிக்கால விபரம் யாருக்குமே தெரியாமல் போய்விட்டது என்று இங்கு சமாளிக்கப்படுகிறது.

## அனுபந்தம்

பின்னால் கிடைத்த சில ஏட்டுச் சுவடிகளில் இருந்து திரு. கைலாசம் கைலாசம் போன கதை பின்வருமாறு இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. அது எவ்வளவு தூரம் உண்மை என்று உறுதிப்படுத்த முடியாமைக்கு வருத்தம் தெரிவிக்கவேண்டியிருக்கிறது.

"உயர் சாதி மனிதர் திருவாளர் கைலாசம் அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்ட தெய்வேந்திரன் பூவுலகத்திற்குத் தனது தேவ விமானத்தை அனுப்பியிருந்தான். அந்தத் தேவ விமானம் யாழ்ப்பாணம் முற்ற வெளியில் வந்து இறங்கியது. கைலாசம் பட்டுடுத்து, பொட்டிட்டு, பன்னீர் பூசி, போசனம் செய்து, தாம்பூலாதிகள் அருந்தி, பந்துக்களிடம் விடைபெற்றுக் கொண்டு விமானத்தில் ஏற, விமானம் 'ஜிவ்' வென்று மேலெழுந்து ஆகாய வெளியில் அந்தரத்தில் தோன்றிய ஜோதியில் புகுந்து, மறைந்தது. இந்தத் திவ்விய காட்சியைக் கண்டவர்களும், காணாதவர்களும், அதைப் பற்றிக் கேட்டவர்களும் கேளாதவர்களும் முக்தி பெற்று மோட்ச உலகை அடைந்தனர்........."

கிழ்சாதிப் புராணம் மூன்று பாகங்களும் அனுபந்தமும் முற்றுப்பெற்றன.

### மாணவர் மன்றம்

இரத்தினபுரி ஸ்ரீ சுமன வித்தியாலய தமிழ் மாணவர் மன்றக் கூட்டம் 6-5-59-ல் செல்வன் ப. முருகையா தலைமையில் நடைபெற்றது. இரண்டாம் தவணைக்கு பின்வருபவர்கள் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:—

இலக்கியக் கழகம்: தலைவர்: செல்வன் க. செல்லையா, உபதலைவர்: செல்வன் சு. கருப்பண்ணன், செயலாளர்: செல்வன் க. முனியாண்டி, உபசெயலாளர்: செல்வன் கே. வீரப்பன்.

கலைமன்றம்: தலைவர்: செல்வன் ச. செல்வராஜ், உபதலைவர்: செல்வன் பீ. கோபால், செயலாளர்: செல்வன் க. தியாகநாதன், உபசெயலாளர்: செல்வன் சி. குப்புசாமி.

சைவசமயச் சங்கம்: தலைவர்: செல்வன். மு. சிவனடியான், உப தலைவர்: செல்வன். மா. வேலு, செயலாளர்: செல்வன். பெ. செல்வநாதன்.


ஆசிரிய கலாசாலைப்
பிரவேசப் பரீட்சை 1959

இப்போட்டிப் பரீட்சையில் நீங்கள் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியைப்பெற உங்களுக்கு வழி காட்டும் எமது புத்தகங்களை இன்றே வாங்கிப் படியுங்கள்.

பாடத்திட்டம் தழுவிய புத்தகங்கள்.

★ பாஷை ★ பூமிசாஸ்திரம் ★ எண்கணிதம் ★ சரித்திரம் ★ பொதுவிவேகம்.


ஒவ்வொரு பாடப்புத்தகமும் ரூபா 12-50.
தபாற் செலவு பிரதிக்கு 35 சதம்.
கடந்தகால வினு விடைகள் ஒவ்வொரு பாடத்துக்கும்
ரூபா. 3-00 தபாற் செலவு 35 சதம்.
விபரங்களும் விலைப் பட்டியலும் இலவசம்

விபரங்களுக்கு எழுதுக:

ஆர்லஸ் ஹோல்,
723, மருதானை, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கைலாசம் கண்டேன்



தார்ச்சனிலுள்ள ராஜ அரண்மனையும் அதன் அருகிலுள்ள வர்த்தகர்களின் கூடாரங்களும்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

னுப்பினோர். மாலைநேரமானதால் இருள் மெல்ல மெல்ல வருவதை நோக்கி வேகமாக இறங்கித் தார்ச்சன் நோக்கி வந்தோம். வழியிலே கண்ணைக் கவர்ந்த கல்லொன்றைக் கையிலெடுத்து வந்து 'ஓம் மணிபத்ம ஹூம்' என்ற திபெத்திய பௌத்த மந்திரத்தைப் பொறிக்க ஏற்பாடு செய்துவிட்டு, கூடாரத்தையடைந்து இரவுணவுண்டு ஓய்வெடுத்தோம்.

### மானசக் கரை

ஜூலை 21-ந் திகதி காலை தார்ச்சனிலிருந்து அன்பர்களிடம்பிரியாவிடை பெற்றுப் புறப்பட்டோம். முன்னுற் தெரிந்த மலைக்கப்பால் சுமார் 10, 12 மைல்களுக்குப் பரந்த வெளி, அம் மைதானத்தை அடைய மலையின் இறுதிக்குப் போதல் வேண்டும். சென்ருேம், சென்ருேம், சென்று கொண்டே இருந்தோம். மலையும் நீண்டு கொண்டே சென்றது. கடைசியாகக் கால்கள் சோர ஒரு நதிக்கரையிற் கூடாரம் அமைத்தோம். கூடார முகப்புக் கைலையைப் பார்த்தவண்ணம் அமைந்திருந்தது. மறுநாட் காலை புறப்பட்டு, மலையின் இறுதியை அடைந்துவிட்டோம். மைதான வெளியிலே மானச சரோருவம் காட்சிதருகின்றது. ஆயினும் கரையை அடையப் பல மைல்கள் செல்ல வேண்டும். இடையிடையே சதுப்பு நிலங்கள், சிற்ருறுகள், பசும்புற்றரைகள், காரைச் செடிகள், காட்டுக் குதிரைகள் இவையனைத்தையும் பார்த்துக்கொண்டே சென்ருேம். கரை சேர்ந்தோம். அதன் எழிலை நன்கு ரசித்தோம். மானச வாவியிற் தவழ்ந்து வந்த மந்த மாருதம் களைப்பை நீக்கக் கரையருகே இரண்டொரு மைல்கள் சென்று ஆனந்தமாகக் குளித்து, சிற்றுண்டி அருந்தினேம். -(தொடரும்)



இதுதான் கௌரி குண்டம். கடல் மட்டத்திலிருந்து 18,500 அடி உயரத்தில் இருக்கிறது. இத்தனை உயரத்தில் குளம் இருக்கிறது என்றால் அதன் நீரின் குளிர் பற்றிச் சொல்லவும் வேண்டுமா?

# கடல் கடந்த நாட்டிலிருந்து குருக்கள் குடும்பத்துக்கு நிதி உதவி

## சிங்களவர்களும் முஸ்லிம்களும் மனமுவந்து அளித்திருக்கின்றனர்

பல மைல்களுக்கு அப்பால் கடல் கடந்த நாட்டிலே வாழும் தமிழருக்கு சுதந்திரன் எழுப்பிய குரல் கேட்டுவிட்டது; இதயத்தைக் கனிய வைத்து இயன்றவகையில் பணிபுரியத் தூண்டிவிட்டது அவர்களை. கடந்த வருட இனக் கலவரத்தின்போது பாணந்துறை இந்துக் கோயிலில் காடையர்களால் கொல்லப்பட்ட பிரம்மஸ்ரீ சுந்தரராஜக் குருக்களின் குடும்பக் கஷ்ட நிவாரணத்துக்காக நிதி திரட்டி அனுப்பியிருக்கிறார்கள்.

பேர்ஷியன் கல்ப்பிலே (Persian Gulf) பஃரானின் (Bahrain) பகுதியில் உள்ள கடற்படைத் தள ஊழியர்களின் சீரிய இச்செய்கை பிற நாடுகளில் உள்ள இலங்கையருக்கெல்லாம் முன்மாதிரியானதொன்ருகும். மத்திய கிழக்கு உலகிலே பேர்ஷியாவுக்கும் அரேபியாவுக்கும் மத்தியில் உள்ளது பேர்ஷியன் கல்ப்.

குருக்கள் குடும்பக் கஷ்ட நிவாரண நிதி என்று ஒன்றை சுதந்திரன் ஆரம்பித்து வைத்தது கிடையாது. மலைநாட்டுச் சகோதரி சி. இராசம்மா என்பவர் முதன் முதலில், "குருக்கள் குடும்பத்தினரின் முகவரி தெரியவில்லை. தாங்கள் இந்த நிதியை அவர்களுக்கு வழங்கி உதவுங்கள்" என்று சொல்லி இங்கு அனுப்பி வைத்த தொகையை பத்திரிகையில் பிரசுரித்திருந்தோம்; பாராட்டும் தெரிவித்திருந்தோம். அவ்வளவுதான் நாம் செய்தது. அதைத் தொடர்ந்து பல அன்பர்களும் தாமாக மனமுவந்து நிதி சேர்த்து அனுப்பத் தலைப்பட்டார்கள். அனுப்பப்பட்டதெல்லாம் குருக்கள் குடும்பத்தாரிடம் சேர்ப்பிக்கப்பட்டது. 3-5-59 சுதந்திரனில் இனிமேல் நிதி அனுப்ப விரும்புபவர்கள் குருக்கள் குடும்பத்துக்கு,

திருமதி இராஜேஸ்வரி
சுந்தரராஜக் குருக்கள்,
இல: 12, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்ற விலாசத்துக்கு நேரே அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டோம். சுதந்திரனுக்கு அனுப்பப்படுமானல், சுதந்திரன் அதற்குப் பொறுப்பேற்கும் நிலையில் இல்லை என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தோம். இதனால், கடந்த வ[illegible] ஒருவர் [illegible] அனுப்பிய நிதிபற்றிய விவரம் சுதந்திரனில் வெளியிடப்படவில்லை.

தற்போது கிடைத்திருக்கும் நிதி கடல் கடந்த நாட்டிலிருந்து வந்திருப்பதாலும் அதில் தமிழர்களுடையது மட்டுமல்லாமல் சிங்களவர்கள், முஸ்லிம்களினதும் நன்கொடைகளும் சேர்ந்திருக்கும் சிறப்பினுலும் அதுபற்றிப் பத்திரிகையில் குறிப்பிடுவது அவசியம் என்று கருதுகிறேம்.

நிதி திரட்டிய அன்பர் திரு நடராசா (M. Nadarajah, E. E. Department, R. N. Base, Bahrain, Persian Gulf) பின்வருமாறு எழுதியிருக்கிறார்:-

"ஐயா,

"தங்கள் 8-3-59 சுதந்திரனில் மலைநாட்டுச் சகோதரி சி. இராசம்மாவால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பாணந்துறைசைவக்கோயில் குருக்கள் குடும்ப நிதிக்கு இங்கு வாழ் பிரித்தானிய கடற்படை தொழிலாளர்களாகிய நாமும் உதவ விரும்பி இச்சிறு தொகையாகிய ரூபாய் இருநூற்றைம்பத்தாறு சதம்மூன்றை (ரூ. 256-03) அனுப்பி வைத்துள்ளோம். இத்தொகையை காலஞ்சென்ற குருக்களின் மனைவியார் திருமதி இராஜேஸ்வரி அம்மையாருக்கு கொடுத்து உதவுவதோடு அன்னருக்கு எங்கள் எல்லோருடைய ஆழ்ந்த அனுதாபங்களையும் தயவுசெய்து தெரிவியுங்கள்.

"நிதி உதவி இங்கிருந்தும் அளிக்கப்படவேண்டுமென்ற எண்ணத்தை வெளிப்படுத்தியவர் திரு சூசைப்பிள்ளையாவார். அவருடைய கருத்துப்படி திரு இராசையாவின் ஒத்துழைப்போடு நாம் முயன்றதன் பலனுக மொத்தமாய் ரூ. 259-00 சேர்ந்தது. அதில் போஸ்டல் ஓடர் கமிஷன், ரெஜிஸ்டர் செலவினம் முதலியவற்றிற்காக ரூ. 2-97 சதம் போக எஞ்சியது ரூ. 256-03 சதம் அனுப்பப்பட்டுள்ளது. நிதிக்கு உதவியவர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தங்களன்புள்ள,
ம. நடராசா"

நிதி அளித்தவர்கள் பெயர்களும் அவர்கள் தனித்தனி வழங்கிய தொகையும்:

ம. நடராசா 10-00; பீ. சூசைப்பிள்ளை 10-00; அ. ராசையா 10-00; க. முருகையா 10-00; செ. சிங்கராசா 10-00; எஸ். அன்றனிப்பிள்ளை 10-00; எட்வின் போன்ஸ்சன் 5-00; மாட்டின் சிங்கா 5-00; எஸ். அப்பையா 5-00; டி. மரிசிவின் 5-00; வி. பொன்னையா 5-00; சு. நடராசா 5-00; க. செல்லையா 5-00; ஆர். ஏ. ரணசிங்கா 5-00; க. பாலசிங்கம் 5-00; கே. டி. யோசேப் 5-00; கே. டி. யோசேப் 5-00; எஸ். பொன்னுத்துரை 5-00; கே. நாகேந்திரம் 5-00; எஸ். தம்பிராசா 5-00; கே. இரா

(13-ம் பக்கம் பார்க்க)

# சமசமாஜிஸ்டுகளா?..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தையும் அறிந்து உரிய பரிகாரம் செய்வதற்குப் பதிலாக நோயின் அறிகுறியான அற்ப அசௌகரியங்களை மாத்திரம் அகற்ற முற்படும் வைத்தியனைப் போன்றவர்கள்தான் இனப் பிரச்னையை விட்டுவிட்டு பொருளாதாரப் பிரச்னையை அணுகுபவர்கள். இதை தமிழ் மக்கள் கவனிக்க வேண்டும். அதே போல் சிங்கள மக்களும் கவனிக்க வேண்டியவர்களாவார்கள். பிரிவினையில் அல்ல, பரஸ்பரம் ஒருவரை ஒருவர் அறிந்து அந்நியோன்னியமாக இருப்பதில்தான் நாட்டின் செல்வச்செழிப்பு தங்கியிருக்கிறது.

### வாழ்த்து

(திரு செல்வநாயகத்தை நோக்கி) தங்களுடைய 61—வது பிறந்த தினமாகிய இன்று என்னுடைய இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பெருமைக்குரிய தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சிங்கள சகோதரர்களின் நட்பையும் நல்லெண்ணத்தையும் பெறப் புதிய முயற்சி செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு என் பேச்சை முடிக்கலாமென்று எண்ணுகிறேன்.

### புது முயற்சி வேண்டும்

தாங்கள் தமிழர்களால் மட்டுமல்லாமல் சிங்களவர்களாலும் பெரிதும் நேசிக்கப்படுகிறீர்கள்; மதிக்கப்படுகிறீர்கள். தமிழ் மக்களின் பிரச்னைகளை, அவர்கள் மன எழுச்சிகளைப் புரிந்து கொள்வதில் தாராள மனத்துடனும் நீதியுடனும் நடந்து கொள்ளுங்கள் என்று எமது சிங்களச் சகோதரர்களைக் கேட்பதில் வெட்கப்பட ஒன்றுமில்லை என்றே நான் கருதுகிறேன்.

மட்டக்களப்பு மக்கள் எந்த நல்ல மனிதரின்பால் ஈடுபாடு கொண்டு அன்பால் கட்டுண்டார்களோ அவருக்குத் தமது அன்பைத் தெரிவிக்க ஏற்படுத்திய வைபவம் இது. இந்த வைபவத்தில் எமது பெரிய மனிதர்களைப் பாராட்டிப் பேசுவதற்கான வாய்ப்பு [illegible] கிடைத்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.

வழுக்கை விழுகின்றதா . . . . . ?
அப்படியானுல் உடனே
"ஹெர்பிநேல்"
உபயோகியுங்கள்




இந்த அற்புத தயாரிப்பு

★ உதிர்ந்த மயிர்களை மீண்டும் வளரச் செய்கிறது.

★ மயிர் உதிர்வதைத் தடுக்கின்றது.

இந்த உன்னத தயாரிப்பு முகலாயச் சக்கிரவர்த்தி ஷா ஆலம் அவர்களின் அரண்மனை வைத்தியர்களது ஏட்டுச் சுவடியில் காணப்பட்ட விபரத்திற்கேற்ப தகுந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டதாகும்.

42 வகையான மூலிகைகள், வேர்கள், மலர்கள், இலைகள் மற்றும் பெறுமதியான சாறுகள் கலக்கப்பட்டது. ஒவ்வொரு தலைப் பொருளும் மனித கேசத்திற்கு நன்மை பயப்பதற்கென பரீட்சிக்கப்பட்டு நிருபணமானது. இந்த ஆச்சர்யமான கேச டானிக்கை தயாரிப்பதற்கு, மேற் கூறப்பட்டவைகள் அனைத்தும் சுத்தமான சீசேம் எண்ணெயில் விஞ்ஞான ரீதியாக கலக்கப் பட்டுள்ளன.

"ஹெர்பிநேல்" ஆரோக்கியமான அடர்த்தியான பட்டுப்போன்ற கருமையான கேசவளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றது. பலவீனமான மயிர்க் கால்களை வலிமையடையச் செய்கின்றது. இதன் காரணமாக மயிர் உதிர்வது தடுக்கப்படுவதோடு புதிதாக கேசம் வளர ஏதுவாகின்றது.

சோல் ஏஜெண்டுகளும் விநியோகஸ்தர்களும்:-

சிர்ருல் கதீர் அன் கம்பெனி,
41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கலைஞர்களுக்கிடையில் பகையை வளர்க்க முனையக் கூடாது'

## கலைப் பத்திரிகைகளுக்கு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அறிவுறுத்தல்

### 'பேசும் படம்' புதுக் கட்டடத் திறப்பு விழாவில் நடிகர் திலகமும் பிற கலைஞர்களும் பங்குபற்றினர்

"கலைப் பத்திரிகைகள் நடு நிலைமைக் கொள்கையைக் கடைப் பிடிக்க வேண்டும். கலைஞர்களைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் எழுதி அவர்களுக்குத் துரோகம் செய்யத் துணியக் கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக, கலை ஓங்கி வளர வேண்டுமானால் கலைஞர்களுக்குள் பகையை வளர்க்கக் கூடாது" இவ்வாறு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் கூறினார்.

"பேசும் படம்" என்ற திங்கள் கலை ஏடு தனக்கெனச் சொந்தமான புதுக் கட்டடத்தை தமிழ் நாட்டு ஹாலிவுட் என்று சொல்லப்படும் கோடம் பாக்கத்தில் கட்டி அங்கு அணிமையில் குடி புகுந்ததையொட்டி நடத்தப்பட்ட வைபவத்தில் பேசுகையிலேயே புரட்சி நடிகர் மேற்கண்டவாறு சொன்னார்.

புதுமனை புகுவிழாவிற்கு விஜயா அதிபர் திரு. நாகிரெட்டி தலைமைவகித்தார். திருமதி எம். எல். வசந்தகுமாரி 'வாழிய செந்தமிழ்' என்ற பாரதியின் பாடலை இனிமையாகப் பாட, நாகசுரம் மங்கள கீதம் ஒலிக்க, சபாநாயகர் திரு. யு. கிருஷ்ணராவ் புதுக் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

புரட்சி நடிகர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் மேலும் பேசுகையில், 'பேசும் படம்' ஆசிரியர் திரு. ராம்னுத்தின் நடுநிலைமைக் கொள்கையை வெகுவாகப் பாராட்டினார்.

அதன் பின்பு பேசிய திரு சிவாஜி கணேசன் திரு. ராம்நாத்தின் நற்குணத்தையும்

(13-ம் பக்கம் பார்க்க)

## செய்தி கதிர்



பத்மினி



ராகினி

### பத்மினி-ராகினி மலேயாவுக்கு பயணம்

பத்மினியும் ராகினியும் தமது தாயாருடனும் தம்பியாருடனும் சமீபத்தில் மலேயா சென்றிருக்கிறார்கள். முன்னரும் இருவரும் மலேயா சென்றது தெரிந்ததே.

மலேயாவில் பல நாட்டிய நிகழ்ச்சிகளில் அவர்கள் பங்குபற்றுவார்கள். சுமார் மூன்று வார காலம் அவர்கள் அங்கு தங்கியிருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### சினிமா, பொலீஸ் நாடகமாகிறது

நடிகர் வி. கே. ராமசாமியும் ஏ. பி. நாகராஜனும் சேர்ந்து தயாரித்த லட்சுமி பிக்ஷர்ஸ் 'தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை' என்ற படம் முழுக்க முழுக்க பொலீஸாரைப் பற்றியதாகும்.

இதை சமீபத்தில் பார்த்த பொலீஸ் தலைமை அதிகாரி திரு. எஸ். பாலகிருஷ்ண ரெட்டி படத்தை வெகுவாகப் பாராட்டி விட்டு, அதை நாடகமாக்கி வருகிற செப்டம்பர் மாதத்தில் இந்திய பொலீஸ் நூற்றுண்டு விழாவில் நடித்துக் காண்பிக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார்.

நாடகமாக்கும் வேலை இப்போது ஆரம்பமாகிவிட்டது. நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் நாடகத்தில் நடிப்பார். சென்னை பொலீஸ் கமிஷனரும் உதவிக் கமிஷனரும் கூட இதில் நடிக்கவிருக்கிறார்கள்.

### சினிமா வர்த்தகசபை தேர்தல்

தென்னிந்திய சினிமா வர்த்தக சபைத் தலைவராக இம்முறை விஜயா அதிபர் திரு. நாகிரெட்டி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். படத் தயாரிப்பாளர்கள் சார்பில் 6 பேர் தெரிவு செய்யப்பட்டார்கள். இந்தத் தேர்தலில் கடுமையான போட்டி இருந்தது. இவற்றை விட தியேட்டர்கள் சார்பில் 5 பேரும் சபை உத்தியோகஸ்தர்களும் நிர்வாக சபை உறுப்பினர்களும் இணைப்புச்

சங்கங்களின் சார்பாகச் சிலரும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

### தாம்பரம் லலிதா மயங்கி விழுந்தார்

நடிகை தாம்பரம் லலிதா திடீர் என்று மயக்கம் போட்டு விழுந்தார். இதனால் சில நாட்களாக அவர்




தாம்பரம் லலிதா

கலந்து கொள்ள வேண்டிய படப்பிடிப்புகளில் கலந்து கொள்ள முடியாது இருக்கிறார்.

குளிக்கும் அறையுள் பிரவேசித்த தாம்பரம் லலிதா

(13-ம் பக்கம் பார்க்க)



''அறிஞர் அண்ணாவின் சிலையும் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரனுடைய அழகிய போட்டோவும் இல்லாவிட்டால் என்னுடைய இல்லம் எழில் பெருது; உள்ளத்திலும் இருள் மண்டி விடும்''—இது விஜயகுமாரியின் (இலட்சிய நடிகை) கருத்து. ஆகவே தமது வீட்டில் இரண்டையும் பெருமையோடு வைத்திருந்து மகிழ்ச்சி காண்கிறார்.

நாட்டுத் தொண்டிலே முன்னணியில் நிற்பவர் அண்ணா என்றும் அதேபோல நடிப்புத் துறையிலே முன்னணியில் திகழ்பவர் தமது அபிமான நடிகர் எஸ். எஸ். ஆர். என்றும் பெருமையோடு கூறுகிறார் விஜயகுமாரி.

"கல்யாணப் பரிசு" என்ற படத்தின் மூலம் முன்னணிக்கு வந்துள்ள்ள புதுமுகம் விஜயகுமாரி. ''கல்யாணப் பரிசு'', ''நாட்டுக்கொரு'' நல்லவள்'' முதலான படங்களில் இருவரும் நடித்திருக்கிறார்கள்.

இருவரும் சேர்ந்து போஸ் கொடுப்பதும் இலட்சிய நடிகர் வைத்த கண் வாங்காமல் தம்மைப் பார்க்கும் போது இலட்சிய நடிகை நாணி முகத்தைத் திருப்பிக் கொண்டிருப்பதும் அழகாயில்லை.........? திரையிலே வரும் காட்சிகள் இவை.

இப்படியும் நடந்தது

## காதலனுடன் ஓடிவிட ஈ. வி. சரோஜா முடிவு

'தள தள' என்று வளர்ந்த பருவக் கொடி ஈ. வி. சரோஜா! தவழ்ந்து படர்வதற்கு ஒரு துணை அவசியம் அல்லவா?

பறிகொடுத்தாள்!

வாலிபர் அசோகனிடம்



ஈ. வி. சரோஜா

இதயத்தைப் பறிகொடுத்தாள்! அவரைக் கல்யாணம் செய்து கொள்வது என்ற முடிவுக்கு வந்தாள்!

பருவக்கரும்பைச் சுவைக்க யாருக்குத்தான் பிடிக்காது! அசோகனும் தன்னைத் தேடி வந்த செல்வத்தை வாரி அணைக்க விரும்பினான்.

### அப்பா எதிர்ப்பு

ஆனால் ஈ. வி. சரோஜாவின் அப்பாவுக்கு இது கட்டோடு பிடிக்கவில்லை!

'அலைகடல் பொங்கி எழுந்தாலும் சரி, அதலபாதாளமே திரண்டு வந்தாலும் சரி, என் ஆருயிர்க் காதலன் அசோகனிடம் இருந்து என்னைப் பிரிக்க முடியாது' என்று திடமான முடிவுக்கு வந்தாள் சரோஜா!

### கோவில் ஓரத்தில்!

காதலின் பெருமை உணராத அப்பாவிடம இருந்து தப்ப முடிவு செயதாள். கோவில் ஓரத்தில் காதலர்கள் சந்திப்பது, அந்த இரவிலேயே அங்கிருந்து ஓடிவிடுவது என்ற முடிவுககு வந்தார்கள்.

ஈ. வி. சரோஜாவின் இந்தத் துணிச்சலான முடிவை ஆர். ஆர். பிக்சர்சாரின்

(13-ம் பக்கம் பார்க்க)

நாடக விமர்சனம்:

## பாசம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி செங்குந்த இந்துக்கல்லூரி மாணவர்கள் சமீபத்தில் "பாசம்" என்ற நாடகத்தைச் சிறப்பாக நடித்தனர். ''சிற்பி'' இதன் கதை வசனத்தை அமைத்திருக்கிறார்.

பெற்றோரின் அணைப்பின்றித் தன்னையே ஒன்றி நிற்கும் தம்பி ராமுவை தன் மனைவியிடம் ஒப்படைக்கின்றான் அண்ணன். அன்பைப் பொழிந்து அவனை வளர்க்கிறாள் அண்ணி. அண்ணியின் அரவணைப்பிலே வளர்ந்த ராமு, தன் சகோதரனைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கும் முதலாளியின் பெண்ணைக் காதலிக்கின்றான். அன்னைக்கு அன்னையாக வளர்த்த தன் அண்ணியிடமே தன் காதலை மறைக்கின்றான். ஆனால் அண்ணி அதை எப்படியோ அறிந்து, அதை ஈடேற்றி வைப்பதாக உறுதி கூறுகிறாள். ஊராரின் பேச்சினால் தன் தம்பி-தாரம் இருவரையும் சந்தேகிக்கிறான் பெரியவன். குடும்பம் பிரிகிறது. வளர்த்த பாசத்தினால் வதங்குகிறாள் அண்ணி. மரணப்படுக்கையிலே போராடும் அண்ணியின் நோய்க்கு மருந்து ராமு என அறிந்து, தன் தவறையும் உணர்ந்து தேடுகிறான் பெரியவன். ஆனால் ராமு வருமுன்பே அண்ணியின் உயிர் பிரிகின்றது. அண்ணன் மனப்பாரம் தாங்காது ஊரைவிட்டே போய்விடுகின்றான். அண்ணியின் ஆசைப்படி, வேலைக்கார முருகன் ராமுவையும் அவன் காதலி சுமதியையும் சேர்த்து வைக்கின்றான். இது தான் கதை.

அண்ணியாகத் தோன்றிய பாலசந்திரனின் நடிப்பு குறிப்பிடத் தக்கது. அன்பும் பண்பும் அடக்கமும் அவரிடம் இயல்பாகவே ஒளிர்விடுகின்றன. பாத்திரத்தை உணர்ந்த அவர் நடிப்புக்கு, அடக்கமான உடையமைப்புச் சோபிதமளிக்கின்றது. அண்ணனாகத் தோன்றிய தம்பித்துரையினதும் தம்பி ராமுவாக வந்த சிவானந்தனின் நடிப்பும் பரவாயில்லை. சிவானந்தன் கோ

(13-ம் பக்கம் பார்க்க)

இப்படியும் நடந்தது

## 'ஜாலி' பண்ணிய பாலையாவுக்கு ஆசைக் காதலியின் அர்ச்சனை

முகத்திலே தாடி! உடல் முழுவதும் திருநீறு! கழுத்திலே ஜெபமாலை! கையிலே கமண்டலம்! இப்படி முழு சிவபக்தராக காட்சி அளித்தார் பாலையா! அவருடைய ஆசைக் காதலி வனஜா!

### ஒன்று போதுமா?

ஒன்றோடு வாழ்பவன் சம்சாரி! ஆனால், பாலையா சந்நியாசி ஆயிற்றே! அவருக்கு ஒன்று போதுமா?

குயில் போல பாட ஒரு குமாரிப் பெண்! கட்டிப் பிடித்து முத்தம் தர இன்னொரு கன்னி! காலிலே சலங்கை கொஞ்ச அவர் நெஞ்சத்திலே நடனம் ஆட ஒரு நங்கை! 'அன்பே என் ஆருயிரே' என்று போதை ஊட்ட மற்றொரு நங்கை! இப்படிப் பல பெண்களுடன் ஜாலியாக இருந்தார் இந்த ஜடாமுடி 'வைமைர்'!

### வனஜாவின் கோபம்!

தனது காதலன் இப்படி கண்ட பெண்களுடன் காதல் விளையாட்டு ஆடுவது வனஜாவுக்குப் பிடிக்கவில்லை. கோபம் கொப்பளித்தது! சுடும் சொற்கள் தெறித்தன அவள் வாயில் இருந்து!

"திருநீறு நெற்றியில், தெய்வ ஜெபமாலை கழுத்தில்! தித்திக்கும் சிவஜெபம் செய்யும் வாயும் கொண்ட அடியாரின் உருவம். வேசிகளின் அணைப்பிலே! வேண்டாத காம நினைப்பிலே! உலகம் இதைப் பொறுக்காது!

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் கடந்த நாட்டிலிருந்து...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

சரெத்தினம் 5-00; ஞா. கீத பொன்கலன் 5-00; ஆர். இராசரெத்தினம் 5-00; கே. வேலுப்பிள்ளை 5-00; ஜே. கே. லோப்பஸ் 5-00; எஸ். சண்முகநாதன் 5-00; கே. சிறிசேனு 5-00; ஐ. ஆரன்ஸ் 5-00; ந. மணியம் 5-00; வ. செல்லையா 5-00; கே. சங்கரநாராயணன் 6-00; எப். ஏ. டேவிட் 4-00; கே. ராசையா 3-00; பி. ராமையா 3-00; எஸ். செல்லத்துரை 3-00; எஸ். நூர்முகையீதீன் 3-00; வி. சீனிவாசன் 3-00; எச். ஈ. பெரைரா 3-00; எஸ். தேவராசா 3-00; எஸ். சூசைப்பிள்ளை 3-00; டி. கே. கங்காதரம் 3-00; கே. ஏ. கிருஷ்ணன் 3-00; கு. தம்பிராசா 3-00; மூ. கந்தையா 3-00; க. கிருஷ்ணப்பிள்ளை 3-00; ந. நல்லையா 2-00; வீ. அப்புத்துரை 2-00; கே. மார்க்கண்டு 2-00; ஹென்றி பெரைரா 2-00; குணசேகரா 2-00; ஹேமபாலா 2-00; டி. எஸ். எல். ஜயசூரியா 2-00; ஐ. அன்றனிப்பிள்ளை 2-00; டி. மார்க்கண்டு 2-00; ஏ. நாகூர்ப்பிச்சை 2-00; என். சின்னதுரை 2-00; என். வி. மூர்த்தி 2-00; எஸ். கோபாலன் 2-00; டி. எஸ். முகமட் 2-00; டபிள்யு. எச். ஜயசேனு 2-00;

மொத்தம் ரூபாய் 259-00 திரட்டி உதவிய அன்பர் அங்குள்ள செலவுகள் போக அனுப்பிய ரூபா 256-03 ம் இலங்கை நாணயப்படி ரூபா 254-50 ஆகிறது. இத்தொகை திருமதி இராஜேஸ்வரி அம்மையாருக்கு அனுப்பப்பட்டு உள்ளது.

இனிமேல் அனுப்ப விரும்புபவர்கள் சுதந்திரன் மூலமாக அல்லாமல் நேரே அம்மையாருக்கு அனுப்பிவைக்க வேண்டுமாய் மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்

## இராமனை . . .

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனுக்குப் பின் நாய் ஒன்று தொடர்ந்தது. அவனைச் சுற்றி அவனுடைய பரிவாரங்கள் புடை சூழ்ந்து வந்தனர். அவர்கள் நானுவித வாத்தியங்களை முழக்கிக் கொண்டிருந்தனர். ஆயிரம் தோணிகளுக்கு அதிபதியானவன் குகன். அவன் தித்திக்கும் தேனும் மீனும் இராமனுக்குக் காணிக்கைப் பொருள்களாகக் கொண்டு வந்தான். வந்தவன், தன் பரிவாரங்களைத் தூரத்தே நிறுத்திவைத்துவிட்டு தான் மட்டும் இராமனைக் காண வந்தான். இராமன் இருந்த ஆசிரமத்தை அணுகினுன். அச்சமயம் இராமனைக் காத்து, ஆச்சிரமத்துக்கு வெளியே நின்ற இலக்குவன் குகனைப் பார்த்து "நீயார்?" என்று கேட்டான்.

## செய்தி கதிர்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு இருந்த வென்னீர் பாய்லர் புகையில் விஷம் கலந்து இருந்ததன் காரணமாகவே மயக்கமுற்று தடால் என்று விழுந்தார். அதிக நேரமாகியும் போனவர் வெளியே வராததை அறிந்த லலிதாவின் கணவர் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று பார்த்த போது திகைத்துவிட்டார்.

தாம்பரம் லலிதாவை இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன், இலட்சிய நடிகை விஜயகுமாரி முதலானேர் சென்று பார்த்தனர்.

## பாசம்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திலும், தாபத்திலும், காதலிக்கும்போதுங் கூட விறைப்பாகவே நிற்கிறுர். சந்தர்ப்பத்திற்கேற்ற உணர்ச்சிப் பிரதிபலிப்புக்களைக் கொஞ்சம் வெளிக்காட்டியிருந்தால் பாத்திரம் சோபித்திருக்கும்.

ஹாஸ்யத்திற்கும் குறையில்லை. உடலை அஷ்டகோணலாக்கிச் சாதுரியமான பேச்சினுல் பார்ப்பவரைப் பரவசப்படுத்தும் வேலைக்கார முருகன் இக்கதையை இழுத்துச் செல்ல உதவுகிறுர். நாடகப் பைத்தியங் காரணமாக அவர் பாடும் அபஸ்வரமான பாட்டுக்கூட......... சபாஷ்!

சில நிமிஷ நேரம் தோன்றினுலும் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கிருர் வெங்காயம். அவர் பேசும் நாட்டுப் பேச்சும், கேலிச் சிரிப்பும்... பிரமாதம்! வெங்காயமாக நடித்த சிறுவன் சிவலிங்கம் பாராட்டுக்குரியவர். சிறுவன் ராமுவாகத் தோன்றிய கந்தசாமியின் நடிப்பில் குறைகூறமுடியாது.

மற்றும் சுமதியாக பரராஜசிங்கமும், சுமதியின் தந்தை பரமசிவம் பிள்ளையாக சண்முகநாதனும் சுமாராக நடித்திருக்கின்றனர். முடிவாக இந்நாடகம் ஓர் நல்ல முயற்சி.

'பாசம்'' என்ற தலைப்பைக் கொண்ட இக்கதையில் அண்ணனின் சகோதர பாசத்தைவிட, அண்ணியின் வளர்த்த பாசமே உயர்வாகத் தெரிகிறபடியால், "வளர்த்த பாசம்'' எனப் பெயரிட்டிருந்தால் பொருத்தமாக இருக்கும். ஆசிரியர் ம. சண்முகலிங்கம் பி. ஏ. இந்நாடகத்தின் "டைரக்ஷன்'' பொறுப்பை ஏற்றுத் திறம்படச் செய்திருக்கிறுர்.

—"யாழ் நங்கை''

## காதலனுடன்..

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் வைக்கப்படாத படத்தில் காணலாம். எஸ். எஸ். ராஜேந்திரன், சரோஜாதேவி ஜோடி நடிக்கும் இந்தப் படத்தை பி. என். ரெட்டி டைரக்ட் செய்கிறுர். துறையூர் மூர்த்தி வசனம் எழுதுகிறுர்.

## திருக்குறள் மாநாடு

இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாளின் போது தமிழ் மறைக்கழகம் நடத்தும் ஏழாவது திருக்குறள் மாநாடு சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரிமாணவர் மன்ற ஆதரவில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மண்டபத்தில் மே 22, 23, 24 ஆம் நாள்களில் நடைபெறும். திருக்குறட் சுவடி ஊர்வலம், விரிவுரைகள், இசை நிகழ்ச்சிகள் முதலியன மாநாட்டில் இடம் பெறும்.

தமிழ்மறைக்கழகம் நடத்திய அகில உலகத் தமிழ் மறைக் கட்டுரைப் போட்டியிற் பரிசிலும் பாராட்டுதலும் பெற்ற கட்டுரைகளைக் கொண்ட "தமிழ்மறைக் கட்டுரைகள்'' எனும் நூல் இம்மாநாட்டில் வெளியிடப்படும்.

இப்போட்டிப் பரிசிலும், அகில இலங்கைத் தமிழ் மறைத்தேர்வுப்பரிசிலும், சுதந்திரன் திருவள்ளுவர் திருநாள் வெண்பாப் போட்டிப் பரிசிலும், வீரகேசரி இளங் கதிர்த் திருக்குறட் கட்டுரைப்போட்டி பரிசிலும் இம்மாநாட்டின் தொடக்க நாளில் மாலை 5-00 மணியளவில் வழங்கப்படும்.

## 'ஜாலி' பண்ணிய..

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்டாக்கிய தெய்வம் உனக்கு தண்டனை தராமல் இருக்காது' என்று வார்த்தைகளை அள்ளி வீசினுள் வனஜா!

### சவுக்கடி சந்திரகாந்தா!

'சவுக்கடி சந்திரகாந்தா' படத்துக்காக இந்தக்காட்சி கோல்டன் ஸ்டுடியோவில் சுடப்பட்டது. தயாரிப்பாளர் ராதாகிருஷ்ணன் டைரக்ட் செய்கிறுர்.

## கலைஞர்களுக்..

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

சலியா உழைப்பையும் பத்திரிகைத் தொண்டையும் புகழ்ந்து பேசி ராம்னுத்தைக் காட்டிலும் தான் வயதில் சிறியவனுக இருந்தாலும் பிள்ளைகுட்டிக்காரன் என்ற முறையில் அவரை ஆசீர்வாதம் செய்வதாகப் பலத்த கரகோஷத்திற்கிடையே கூறினுர்.

பிறகு திரு நாகையா, திரு டி. கே. ஷண்முகம், கலைஞர் கருணுநிதி முதலியவர்கள் பேசினுர்கள்.

இவ்விழாவை யொட்டி தன் அலுவலகத்தில் பணி புரியும் சிப்பந்திகளுக்கு ஒரு மாத சம்பளம் போனஸ் அளிப்பதாக திரு ராம்னுத் தெரிவித்துக் கொண்டார்.

திரு. ராம்னுத்தும் மற்ற உதவியாசிரியர்களும் இவ்விழாவுக்கு வந்திருந்தவர்களை இன்முகத்துடன் வரவேற்றுத் தேநீர் விருந்தளித்து உபசரித்தனர்.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) வின்சர் (யாழ்ப்பாணம்)

பிறின்செஸ் (ஹட்டன்) நெல்சன் (திருகோணமலை)

சிவாஜிகணேசன்,
அஞ்சலிதேவி,
சந்திரபாபு,
தங்கவேலு, ராஜம்

நடிக்கும்

நான் சொல்லும் ரகசியம்



நடனம் : ஹெலன்.






எஸ். எஸ். ராஜேந்திரன், பி. சரோஜாதேவி,
பிரேம் ... வி. கே. ராமசாமி,
டி. பாலசுப்பிரமணியம், ... நடிப்பது.

மகத்தான 3-வது வாரம்!

சென்ட்ரல் ஓடியன்
(மருதானை) (கல்கிசை)

ராணி (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6, இரவு 9-30 க்கும் சனி, ஞாயிறு, பிற்பகல் 2 மணிக்கும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் காண்பிக்கப்படும்.

ஜோதி (திருகோணமலை)

தினசரி மாலை 6, 9-30 க்கும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கும் காண்பிக்கப்படும்.

லிபர்ட்டி (பதுளை)

தினசரி மாலை 6 மணிக்கும், இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு பிற்பகல் 2-30 மணிக்கும், ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கும் காண்பிக்கப்படும்.

கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை

பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன், ஸ்ரீநிவாஸ், எஸ். ஜானகி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டது கற்க.....

இந்தப் பகுதிக்கு நேயர்கள்கூட விஞக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன்

1. உலகில் முதன் முதல் அமைக்கப்பட்ட பல்கலைக் கழகம் எங்கே உள்ளது?

—க. சுப்பிரமணியம், காரைநகர்.

2. 'குட்பை' (Good bye) என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறார்களே, இது எப்படி வந்தது?

—இராமலிங்கம், சாவகச்சேரி.

3. செஞ்சிலுவைச் சங்கம் எங்கு எப்போது முதன் முதலில் நிறுவப்பட்டது?

4. கணவன் என்ற சொல் உள்ளடக்கியுள்ள பொருள் என்ன தெரியுமா?

5. இப்போது உள்ள தபால் முறைக்கு அடிகோலியவர் யார்?

—யூ. எல். எம். அபூபக்கர், சாய்ந்தமருது.

## ..............பண்டிதனுவான்

## எல்லோருக்கும் ஒவ்வொன்றெளிது!

''வான் குருவியின் கூடு
வல்லரக்குத்
தொல்கரையான்
தேன் சிலம்பி யாவர்க்குஞ்
செய்தரிதால்
—யாம் பெரிதும்
வல்லோமே? என்று வலிமை
சொலவேண்டாங் காண்

ஆம்! நிலையற்ற வாழ்வு வாழ்கின்ற மக்களைப் பற்றித்தான் ஔவை கூறினுள் மேற்கூறிய பாடலை. ஆம்! தாங்கள்தான் இந்த உலகத்தின் பெரியவர்கள்-வல்லவர்கள் என்றெல்லாம், வீண் வம்பு பேசும் தனி மனிதன் தொடக்கம், பெரிய வல்லரசுகள் வரையும், அறிவுறுத்தும் வகையில்தான் கூறி வைத்தாள் ஔவை.

"ஏ! மனிதவர்க்கமே? ஏன்? நீங்கள் உங்களைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்ளுகிறீர்கள்! உங்களால் வானில் பறக்கும் வான் குருவியின் கூட்டைப் போல், ஒன்றையாகிலும் உங்களால், கட்ட முடியுமா? அல்லது கறையான் புற்றைப் போலாவது ஒன்றைத்தான் செய்யமுடியுமா? அல்லது தேனீ கூட்டைப் போலாகிலும் ஒன்றைத்தான் உற்பத்தியாக்க முடியுமா? இவைகளை எல்லாம் செய்ய முடியாமல் இருக்கும் போது, நாம் பெரிதும் வல்லோமே? என்று வலிமை பேசுவதில் என்ன பயனுண்டு! இதை உணராது, "எல்லோருக்கும் ஒவ்வொன்றெளிது என்பதை அறியாது வாழ்கிறீர்களே"? என்று அறிவுறுத்துகிறார்.

இந்த அறிவுரை பெரியவர்களுக்கு மட்டுமல்ல? அல்லது வலிமை பேசும் இன்றைய வல்லரசுகளுக்கு மட்டுமல்ல? முக்கியமாக நம் போன்ற இளைஞர்களுக்கும் அறிவு போதிப்பதாக இருக்கிறது. எனவே "நான்தான் வல்லவன்" என்ற அகந்தையில் இறங்கி அல்லற்படாமல், அல்லது "யாம் பெரிதும் வல்லவர்கள்" என்று வலிமை சொல்லாமல், "எல்லோருக்கும் ஒவ்வொன்றெளிது" என்ற ஔவை வாக்குக்கொப்ப வாழ்வோமாக!

—எஸ். சோமசுந்தரம்,
கொம்மாதுறை.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 9.

பெயர்..............................................

பாடசாலை..............................................

விலாசம்..............................................

..............................................

.............................. பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

.............................. கையொப்பம்




நாலாம் தம்பி:

## இராமனைக் காணவந்த குகன் (1)

"நிசாரி"

### இராமன் வரலாறு:

கம்பன் படைத்த மகா காவியம் இராமாயணம். இராமன் என்னும் மூர்த்தியை நாயகனுகக் கொண்டு அமையப் பெற்றது அக்காவியம். இராமன் சகல குணங்களும் அமையப் பெற்றவன். இறைவனுக்கு ஒப்பானவன் அவன் ஒரு தெய்வீகப் படைப்பாக அமைக்கப்பட்டவன். இராமனைச் சார்ந்து கதை வளர்கிறது; அறம் போதிக்கிறது. சகல குணங்களும் அமைந்த இராமனைச் சார்ந்தவர்களும் அவனுடைய குண நலங்களில் சார்புடையவர்களாகவே காணப்படுகின்றனர். மகாபாத்திரமான தெய்வீக புருஷன் இராமனின் மனத்திற்குள் குறுகியகாலத்திற்குள் இடம் பெற்று, அவனுடைய பரிபூரண அன்பைப் பெற்றவன் குகன்.


தம் தந்தையின் சத்தியத்தை நிலை நாட்ட மனைவி சீதாபிராட்டியாருடனும், தம்பி இலக்குவனுடனும் வனம் செல்ல புறப்படுகிறான் இராமன். வனம் செல்லும் வழியில் கங்கையைக் கடக்க வேண்டி ஏற்படுகிறது. கங்கைக் கரையிலே முனிவர்கள் இராமனை மிகுந்த அன்போடு உபசரிக்கின்றனர். அவர்களுடைய அன்பிலே மகிழ்ந்திருக்கும் சமயத்தில் இராமனைக் காண வேடர் கோமான் குகன் வருகிறான். தமிழ் நாட்டில் குறிஞ்சி நிலத்தில் வாழ்பவர்களுக்குத் தெய்வம் முருகன். கங்கைக் கரை வேட்டுவனுடைய பெயரும், முருகனுடைய திரு. நாமங்களில் ஒன்றே.

### குகனின் தோற்றம்:

இராமனைக் காத்து நின்றான் இலக்குவன். குகனின் தோற்றத்தை இலக்குவனே முதலில் கண்டான். குகனின் செருப்புத் தாங்கிய பெருத்த பாதங்கள் பலம் பொருந்தி விளங்கின. அவற்றிற்குச் சுற்றி மேலே வீரக்கழலை அணிந்திருந்தான். [illegible] தொடைகள். புலிவால்கள் தொங்க விடப்பட்டிருந்த தோல் உடை அவனுடைய இடையைச் சுற்றியிருந்தது. இடையிலே இறுகக்கட்டிய வாள் தொங்கியது. அவனுடைய முன் கைகளிலே பனஞ் சிறும்பு போல் மயிர்கள் குத்திட்டு நின்றன. அவனுடைய மார்பு கறுத்த பாறை போன்று தோன்றியது. கண்களிலே கடுமையான பார்வை ஒளிர்ந்தது; எப்பொழுதும் கோபம் கொப்புளித்துக் கொண்டிருக்குமாற்போன்ற நடுக்கம் விளைவிக்கும் பார்வை அது!. நெற்கதிர்களை வரிசையாகக் கோத்தாற் போன்று நெறிந்த புருவம், சிரித்தல் மறந்து சீற்றம் தோன்றுமாற் போன்ற பார்வை. கரிய இருள் கற்றை போன்ற தலைமயிர். எண்ணெய் வழியும் இருண்ட மேனி. எமன் அஞ்சும் இடிமுழக்கும் குரல். ஆறுகளுள் ஆழமான கங்கை போன்று, மனிதர்களுள் நெடிய உடல் கொண்டவன். தேனும் ஊனும் மீனும் உண்ணுவதால் அவன் வாயில் அந்த நாற்றம் அடித்தது.

(13-ம் பக்கம் பார்க்க)

## திருமுறை ஓதும் திறமைப் போட்டி



யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் சமீபத்தில் நடாத்தப்பட்ட திருமுறை ஓதும் திறமைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற அளவெட்டி சதாநந்த வித்தியாலய மாணவர்கள்:

இடமிருந்து வலம் (1) மத்திய பிரிவு ஆண்கள்: முதற் பரிசு பெற்ற செல்வன் இ. சோமசுந்தரேஸ்வரசர்மா (2) கீழ்ப்பிரிவு பெண்கள்: முதல் பரிசு பெற்ற செல்வி அ. சூரியகுமாரி, (3) மேற்பிரிவு பெண்கள்: முதற் பரிசு பெற்ற செல்வி இ. பரமேஸ்வரி.

## வளர்மதி புதிய மருக்கள்

2221 பு. தனபாலசிங்கம், பளை.
2222 திலகவதி கந்தையா, தெல்லிப்பளை,
2223 க. தருமரெத்தினம், கலுவாஞ்சிக்குடி.
2224 சி. தங்கையா, டிக்கோயா.
2225 நியூட்டன் யோ. இம்மானுவேல் அட்டன்.
2226 செ. இராசதுரை, செங்கலடி.
2227 இ. யோகாநந்தன், யாழ்ப்பாணம்.
2228 க. சொக்கலிங்கம், ஆரயம்பதி.
2229 வ. யோகேஸ்வரி, வெள்ளவத்தை.
2230 மு. பவானந்தம், சுன்னுகம்.
2231 சு. கந்தசாமி, காரைதீவு.
2232 நி.வ.ஜ இரத்தினம், புங்குடுதீவு.
2233 தராசு தாசன், செந்தோம், சென்னை.
2234 ச. ஜெ. பாண்டியன், கண்டி.
2235 க. மகேஸ்வரன், மத்துகாமம்.
2236 க. தேவநாதன், கோட்டைமுனை.
2237 ஆறுமுகம் கனகரத்தினம் கரவெட்டி.
2238 எஸ். வி. ஆர். வேதநாயகம் கொழும்பு-13.
2239 ஜே. டி. எஸ். சத்தியநாதன், புவாக்பிட்டிய.
2240 குமுதம் வைத்திலிங்கம், யாழ்ப்பாணம்.
2241 ஏ. வெனிஸ்லாஸ், சுன்னுகம்.
2242 கு. கமலேஸ்வரி, இடல்காசின்னை.
2243 கனகரத்தினம், யாழ்ப்பாணம்.
2244 அ. செல்வராஜன், யாழ்ப்பாணம்.
2245 மனோன்மணி வேலாயுதம், நல்லூர்.
2246 வ. ராஜசேகரன். கொழும்பு-13.
2247 ஆர். சற்குணனந்தம், மட்டக்களப்பு.
2248 த. ம. பீற்றர் பொன்கலண்ட், குண்டசாலை.
2249 செ. அந்தோனி, மட்டக்களப்பு.
2250 சித்திஜிவ்ரியா, புத்தளம்.
2251 எஸ். வீரபுத்திரன், தலவாக்கொல்லை.
2252 செ. அ. இளஞ்சேரன், கொழும்பு-6.
2253 அ. மங்களேஸ்வரி, பளை.
2254 மு. ஆதம்லெவ்வை, ஹந்தஸ்ஸ.

## கண்டது கற்கப் பண்டிதனுவான்

(விடைகள்)

1. முதன் முதலில் அமைக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஏதென்ஸ் கடற்கரைப் பகுதிக்கருகே லைசியம் என்ற இடத்தில் உள்ளது. கி. மு 480-ல், அரசியல் சாஸ்திரம் ஆதியில் எழுதி வெளியிட்ட பிளாட்டோவினுல் ஸ்தாபிக்கப்பட்டது.

2. கடவுள் உன்னுடன் இருப்பாராக ' (God be with you) என்பதுதான் காலக்கிரமத்தில் மருவி 'குட்பை' (Good bye) ஆகிவிட்டது என்று சொல்லப்படுகிறது.

3. ஜெனிவா நகரத்தில் 1870-ல் செஞ்சிலுவைச் சங்கம் முதன் முதலாக நிறுவப்பட்டது. ஆயினும் செஞ்சிலுவைச் சங்கக் குறிக்கோளின்படி அது தோன்றுவதற்கு முன்பே தமிழன் நடந்து கொண்டான் என்பதை அறிஞர் அண்ணாத்துரை சமீபத்தில் தெளிவு படுத்தினுர். பாரதப் போரில் இருதரப்பாருக்கும் அன்னமிட்ட தமிழ் மன்னனின் பண்பாங்கை அவர் உருக்கமாக எடுத்துரைத்தார்.

4. மனைவிக்கு கண் அவன் (கண்—அவன்) என்ற பொருளைத்தான் கணவன் என்ற சொல் உள்ளடக்கி யிருக்கிறது.

5. ஒரு பள்ளி ஆசிரியர். பெயர் ரௌலண்டு ஹில். இங்கிலாந்தைச் சேர்ந்தவர். 1837-ல் தொடக்கி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கொம்யுனிஸ்டுகளின் சாயம் வெளுத்துவிடும் வாலும் நறுக்கப்பட்டுவிடும்

## அவர்களுக்கு இடமளிப்பது நச்சுப் பாம்பை மடியில் வைத்து கொஞ்சுவதற்கு ஒப்பாகும்'

### எட்டியாந்தோட்டை தொழிலாளர் விழாவில் சங். ஜே. பர்ணுந்து சுவாமிகள் பேச்சு

"எந்த நாட்டில் காலடி வைத்தாலும் இரத்தக் கறையோடு இரண்டறக் கலந்து உலாவி வரும் கொம்யுனிஸ்ட்டுகளின் குட்டு எங்கும் படிப்படியாக வெளிப்பட்டு வருகிறது.

"இலங்கையிலும் அவர்களுடைய சாயம் விரைவில் வெளுத்துவிடும். அவர்கள் வாலும் ஒட்ட நறுக்கப்பட்டுவிடும். நாட்டிலே கொம்யுனிஸ்ட்டுகளை நடமாடவிடுவது நச்சுப் பாம்பை மடியில் வைத்துக் கொஞ்சுவதற்கு ஒப்பாகும்'' என்று எட்டியாந்தோட்டையில் தொழிலாளர் விழாவையொட்டி நடைபெற்ற கத்தோலிக்கத் தொழிலாளர் கூட்டத்தில் சங். ஜே. பர்ணுந்து சுவாமி பேசும்போது கூறினார்.

இக்கூட்டத்திற்கு பல பாகங்களிலுமிருந்து கத்தோலிக்கரும் கத்தோலிக்கரல்லாதாருமான பல தொழிலாளர்கள் வந்து பங்குபற்றிக்கொண்டனர். கூட்டத்தில், தொழிலின் முக்கியத்துவம், கத்தோலிக்க வேதமும் தொழிலாளியும், கொம்யூனிஸமும் அதன் தந்திர நடவடிக்கைகளும், கூலி வேலைநிறுத்தம், இளம் கத்தோலிக்கத் தொழிலாளர் அமைப்புபோன்ற பல முக்கிய விஷயங்கள்பற்றிப் பேசப்பட்டது. பங்குக் குருவானவர் சங். சீ லெக்கியோனி தலைமைதாங்கினார்.

கூட்டத்தில் பேசிய உதவி பங்கு சுவாமியார் சங். ஏ. ஸ்டெபெனிஸி பின்வருமாறு கூறினார்:-

"தொழிலின் மகத்துவத்தை, உழைப்பின் உன்னதத்தை உணராதவர்கள் மார்க்ஸியவாதிகள். எந்தக் காரியங்களையுமே அவர்கள் மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்கள். புறக்கண்கள் மட்டுமே அவர்களுக்குண்டு. அகக்கண்களை இழந்தவர்கள் ஆழ்ந்து சிந்திக்க முடியாது. தொழிலாளி உழைக்கிறான்—மாடாக உழைக்கிறான். மாடும்தான் உழைக்கிறது. ஆனால் மாட்டுக்கோ வயிற்றுக்குப் புல்லும், படுத்துக்கொள்ளப் பட்டியும் போதுமானது. மனிதன் இத்தகைய புறசௌகரியங்களால் மாத்திரம் திருப்தியடைபவனல்லன். அவனுள்ளே மிக உயர்ந்த—மதிப்புக்குள்ளடங்கா ஒரு சக்தி மறைந்திருக்கிறது.

"இந்தச் சக்தி அவனை மிருகத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இந்தச் சக்தியை உணராத காம்ரேடுகள் அவனை வெறும் ஜடப்பொருளாக—இன்றிருந்து நாளை இல்லாமல் மறைந்துவிடும் துரும்பென நினைத்து, அந்தக் கொள்கையின் அடிப்படையில் நச்சுப் பிரசாரம் செய்கிறார்கள். இதில் மயங்குவோர் தங்கள் மனிதப் பண்பையே இழந்து மிருகத்துக்கும் கேவலமாக பல சந்தர்ப்பங்களில் நடந்துகொள்கின்றனர். இவர்களுடைய கொடிய—நச்சுத் தன்மைவாய்ந்த கொள்கைகள் மட்டில் நம் சகோதரத் தொழிலாளர்கள் சர்வஜாக்கிரதையாயிருக்க வேண்டும்"

சுவாமி ஸ்டெபெனிஸி தொடர்ந்து பேசுகையில், "கத்தோலிக்கத் திருச்சபை தொழிலின் முக்கியத்துவத்தை மாத்திரமல்ல, தொழிலாளியின் மதிப்பையும் உணர்கிறது. வேதாகமத்திலும்கூட இதைப்பற்றிய விஷயம் காணக்கிடக்கிறது. ஆதிபிதாவுக்குத் தண்டனையாக அளிக்கப்பட்ட தொழில் கிறிஸ்துபெருமானின்மூலம் மகிமைப்படுத்தப்பட்டது. கிறிஸ்து, தொழிலாளியாக ஜீவித்து ஏனைய தொழிலாளர்களுக்கு முன்மாதிரியாக விளங்கினார். அவரைப் பின்சென்ற அவரது சீடர்களும் சாதாரண தொழிலாளர்களே! இதிலிருந்து கத்தோலிக்கத் திருச்சபை, தொழிலாளர் விழாவைக் கொண்டாடுவது எவ்வளவோ பொருத்தமானதென்பது புலனாகும்'' என்றார்.

தென்னகத்தின் சிறந்த பேச்சாளர்களிலொருவரும் ஈழத்திற்கு விஜயம் செய்திருப்பவருமான சங். ஜே. பர்ணுந்து சுவாமிகள் மேலும் பேசுகையில் சொன்னதாவது:- "புலனுணர்வால் உணர முடியாத சக்தியைப்பற்றி அறியாதவர்கள்—கவலைப்படாதவர்கள் கொம்யூனிஸ்ட்டுகள். பகுத்தறிவில்கூட இவர்களுக்கு நம்பிக்கையில்லை. இயற்கை எவ்வளவோ ஒழுங்குடன் தன் செயலைப் புரிகிறது. இந்தச் செயலுக்கு அடிப்படையான ஒரு சக்தி உண்டு என்பதை பகுத்தறிவால் மாத்திரமே உணர முடியும். உழைக்கக் கடமைப்பட்டுள்ள மனிதன் தனது உடனடியான தேவைகளைப் பூர்த்தி செய்ய மாத்திரம் உழைப்பவனில்லை. தன்னுடையவும் தன்னுடைய குடும்பத்தினுடையவும் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டும் உழைக்கக் கடமைப்பட்டுள்ளான். ஆகவே அவன் சேமிப்பது, தனக்காகவும் தன் குடும்பத்துக்காகவும் சொத்து வைத்துக்கொள்வதுபோன்றவை அவனது இயற்கை உரிமைகளாகும். இதை மறுப்பது மகா அநீதி.

"கொம்யூனிஸ நாடுகளில் மனிதனின் உரிமைகளைத்தும் காலமுமிற்போட்டு மிதிக்கப்படுகின்றன. கொம்யூனிஸம் காலடி வைத்த இடங்களையெல்லாம் நாம் ஒருமுறை உற்று நோக்கினால் இரத்தக்கறைகள் இன்னும் அப்படியே படிந்திருப்பது புலனாகும். இந்தக் கறைகள் எக்காலமும் அழியா. உலகம் அழியும் மட்டும் உலக மாந்தர்களுக்கு பொதுவுடைமையின் பயங்கரத் தன்மையைப் பறைசாற்ற இக்கறைகள் நீங்காது நிற்கும். எங்கெங்கு கொம்யுனிஸ்ட்டுகள் காலடி வைக்கிறார்களோ அங்கங்கெல்லாம் அவர்கள் தங்கள் முத்திரையைப் பதிய வைக்கிறார்கள்.

"இலங்கையிலும் இன்று கொம்யூனிஸ்ட்டுகள் தங்கள் வாலை நீட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்கு இடமளித்திருக்கிறது இன்றைய அரசாங்கம். ஏனைய கொம்யுனிஸ்ட்டு நாடுகளில் அவர்கள் புரியும் அட்டூழியங்களைக்கண்ட ஜனநாயக நாடுகள் நெஞ்சம்பதைபதைத்து நிற்கும்போது இலங்கை விஷ சர்ப்பத்தை மடியில் வைத்து கொஞ்சுவதுபோல் கொம்யூனிஸக் கொள்கையை வளரவிடுவது ஆபத்தானதாகும். எங்கும் கொம்யூனிஸ்ட்டுகளின்சாயம் சீக்கிரமே வெளுத்துவிடுகிறதாகையால் இலங்கையிலும் அவர்களின் சாயம் வெளுபட்டு அவர்களின் வால் ஒட்ட நறுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் நாள் அதிக தூரத்திலில்லை என எண்ணுகிறேன்.

"அவர்களின் வலையில் விழுவது பொதுவாக பாமர ஏழைத் தொழிலாளர்தாம். தொழிலாளர்கள் விழிப்படைந்து கொம்யூனிஸத்தின் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள ஒன்றுதிரண்டு முழுமூச்சுடன் முன்வர வேண்டும். இந்த விழாவிலேயே அத்தகைய ஒரு நற்செயலைச் செய்ய சங்கற்பம் செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்' இப்படி சங். பர்ணர்து சுவாமி கூறினார்.

---

### தமிழ் இளைஞர் மன்றம்

"மக்கள் தமது கொள்கைகளைப் பொறுத்தளவில் மிகவும் வேறுபட்டவர்களாய் இருக்கின்றார்கள் எனினும் இவர்கள் யாவரும் தாம் யாவரும் உழைப்பது நாட்டின் நலனுக்காகவே என்ற ஒரே விஷயத்திலாவது ஒரு தரப்பட்ட எண்ணமுடையவர்களாய்-பரஸ்பரம் கூட்டுறவு மனப்பான்மையுள்ளவர்களாய் வாழ்தல் வேண்டும். ஒரு நாடு முன்னேற ஒரே வழி இதுதான்'' என்று சிலாபம் தமிழ் இளைஞர் மன்றத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. வி. எம். ஏ. முகமது கூறினார். மன்றத்தின் தலைவராகக் கடமையாற்றிய திரு. எஸ். ஏ. சாமி மேல்படிப்புக்காக மாறிச் செல்வதையிட்டு அவரைப் பாராட்டுமுகமாக ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

திருவாளர்கள் சதக்கத்துல்லா, அஸ்வத்கான், றேமன் பர்ணுந்து உட்படப் பலர் திரு. சாமி அவர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

பின்னர் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கீழ்க்கண்ட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு. வி. எம். ஏ. முகம்மது, இணை உதவித் தலைவர்கள்: திரு. றேமன் பெர்ணுந்து, திரு. எம். அஸ்வத்கான், செயலாளர்: திரு. எஸ். எம். பைஸ்தீன், உதவி செயலாளர்: திரு. க. தருமதுரை, பொருளாளர்: திரு. சமிவஸ் பர்ணுந்து, உதவி பொருளாளர்: திரு. எச். எம். சதக்கத்துல்லா, இணை நூல் நிலையப் பொறுப்பாளர்கள்: திரு. சார்ல்ஸ் ரொட்ரிகோ, திரு. இப்போலிட்டஸ் பர்ணுந்து.

---

### அறபிக் கலாசாலை

[illegible] சங்கம்

வெலிகாமம் [illegible] அறபிக் கலாசாலை ஜெம்இய்யதுல் மஃதினுல்புஸ்ஹறா மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் சென்ற 30-4-59ல் ஜனுப் கே. எம். பாரூக் தலைமையில் நடைபெற்றது. கீழ்க்கண்டவர்கள் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: கே. எம். பாரூக், உபதலைவர்: எம். எம். எஸ். முஹம்மத், காரியதரிசி: எம். எச். எம். றஸ்ஸாக், உபகாரியதரிசி: எம். எஸ் ருசிக், தனாதிகாரி: எம். எம். ஹிபதுல் கரீம், உபதனாதிகாரி: கே. பஸீர் லெவ்வை, வசூலாளர் எஸ். எம். ஹனிபா, கணக்குப் பரிசோதகர்: எம். எஸ். எம். இப்ருஹீம், உப பரிசோதகர்: எம். எஸ். எம். ஸலீம். பதினைந்து பேர்கள்கொண்ட காரியக் கமிட்டி ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---

### ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்

இரத்தினபுரி மகாவல தோட்டம் மேற்பிரிவு ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தோட்டக் கமிட்டியின் ஆதரவில் சென்ற 1-5-59ல் மே தினப் பொதுக்கூட்டம் செயலாளர் திரு அ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

இளைஞர் முன்னேற்ற கழகச் செயலாளர் திரு ப. முருகையா பேசுகையில் தொழிலாளர் அனைவரும் ஐக்கியத்துடன் போராடினால்தான் தங்கள் உரிமைகளைப் பெற முடியுமென்று கூறினார்.

மற்றும் திருவாளர்கள்: பரமன் (உபதலைவர்) இ. கந்தையா, ப. நடேசன், ந. குப்புசாமி, பொ. காசிநாதன் முதலியோரும் கூட்டத்தில் பேசினார்கள்.

---

### இ. தி. மு. க. மே தினப் பொதுக்கூட்டங்கள்

இராசா தோட்டம், பிட்ராத்மலை, வெவ்வாலை, தெமோதர, நெதர்வில. உடுவரை, நமுனுகுல, பெரிய கலைரவரை, ஐந்தாம் கட்டை சதர்லேண்ட், கும்பாவெல, மாளிகாதன்னை, தங்காப்பு, நெலுவை ஆகிய தோட்டங்களிலும் பண்டாரவளை நகர இ. தி. மு. க. ஆதரவிலும் மே தினப்பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. பல தோழர்கள் மே தினத்தை ஏன் கொண்டாட வேண்டுமென்பதைப் பற்றிவிளக்கிப் பேசினார்கள்.


## உங்கள் தேவை என்ன?

★ இரும்பு, ★ சிமெந்து,
★ ஆணிகள், ★ மெஷின்கள்,
★ கட்டடச் சாமான்கள்.

நம்பிக்கையான பொருட்கள் விலை சகாயமாகக் கிடைக்குமானால் யார்தான் விரும்பமாட்டார்கள்? உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்.


## கதிர் ஹார்ட்வேயர்ஸ்

"மொம்சாக் கட்டடம்"
11/1 ஸ்டான்லி றேட்,
யாழ்ப்பாணம்.



இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




★ ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி

★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

★ உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்ழுசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாம் விரும்பும் 6-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் பதினான்கு திரைகளில்
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!



எமஜியார் பிக்சர்ஸ்

# நாடோடி மன்னன்

டைரக்‌ஷன்: எம்.ஜி.ஆர்

ஒளிப்பதிவு: G.K.ராமு

ஸ்டுடியோ: வாஹினி

கன்னித் தமிழரின் தீரம் காட்டும் கதை! கனல் பொறிக்கும் நடிப்பு!
கலைச் செறிவு நிறைந்த காட்சிகள்!

நடிகர்கள்:

புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன்,

பி. பானுமதி, சந்திரபாபு, பி. சரோஜா தேவி,

எம். என். ராஜம், சக்ரபாணி, பி. எஸ். வீரப்பா, நம்பியார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 மே மாதம் 17-ந் திகதி பிரசுரிக்கப்பட்டது.